விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 06 திங்கட்கிழமை (22.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# வாக்குறுதியை மறந்தால் நெருக்கடி கொடுப்போம்!

## இலங்கைக்கு பிரித்தானியா மீண்டும் எச்சரிக்கை

மனித உரிமை நிலைமைகள் மோசமடைந்தாலோ அல்லது சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டாலோ எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின்போது இலங்கைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என பிரித்தானியா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. நாடாளுமன்றக் குழு இன்று கொழும்பு வருகை

(கொழும்பு)

பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவொன்று இலங்கையின் நல்லிணக்க முனைப்புகள் குறித்து அறிந்து கொள்ள இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இன்று கொழும்பு வரவுள்ள இந்தக் குழுவில், கொன்சர்வேட்டிவ் கட்சியின் எலேனர் லையிங், தொழிற்கட்சியின் சைமன் மடன்சுக், கெரி மக் கர்தி, மற்றும் சேய்க் பிரபு, பரோனஸ் ஹேய்ரர் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறவுள்ளனர்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் 26-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து இங்குள்ள நிலைமைகளை அவதானிக்கவுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் சமல் ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேச இந்தக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.


இந்த உண்மை கண்டறியும் பயணத்தை பொதுநலவாய நாடாளுமன்றச் செயலகமும், கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகமும் ஒழுங்கு செய்துள்ளன. (செ-4)

## விக்னேஸ்வரனின் வெற்றி நிச்சயம்!

### வீண் பிதற்றல்கள் தேவையில்லை-சுரேஸ்

வடக்கு தமிழ் மக்களின் சார்பாக வட மாகாண தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னிலைப் படுத்தியுள்ள முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் வெற்றி உறுதி என்பதை அறிந்த பேரினவாதக் கட்சிகள் அவரை புலியென்றும் அன்ரன் பாலசிங்கத்தின் மறு உருவம் என்றும் பிதற்ற ஆரம்பித்து விட்டன. இது அநாகரிகமான செயல் என கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன எம்.பி தெரிவித்தார்.

இது தொடர்பில் சுரேஸ் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,



தமிழ் ்மக்கள் சார்பாக வடக்கு மாகாண சபைக்கு நிறுத்தப்பட் டுள்ள முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் (19ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதமிருந்த தமிழ் அரசியல் கைதி வைத்தியசாலையில்

வெலிக்கடை சிறைச்சாலையில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதி சுகவீன முற்றநிலையில் வெலிக்கடை சிறைச்சாலையின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வளிக்க வேண்டும் எனக் கோரி தமிழ் அரசியல் கைதியான 22 வயதான சுந்தரலிங்கம் கேதீஸ்வரன், கடந்த இரண்டு வாரங்களாக வெலிக்கடை சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு வேட்பாளர்கள்!


வட மாகாண சபை தேர்தலில் விடுதலைப்புலிகளின் முன்னாள் திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளரான எழிலனின் மனைவி ஆனந்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளராக களமிறக்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் தமிழ் தேசியக கூட்டமைப்பின் ஆசனப் பங்கீட் டிற்கான தெரிவுக்கூட்டத்தின் அடிப்படையில் மொத்தமுள்ள 19 இடங்களில் யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் பொது வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் நிறுத்தப்படவுள்ளார்.

எனவே எஞ்சியுள்ள 18 ஆசனங்களில் தமிழரசுக் கட்சிக்கு 7 ஆசனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு 4 ஆசனங்களும், ரெலோவுக்கு 3 ஆசனங்களும், புளொட் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றுக்கு தலா 2 ஆசனங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சியின் 7 ஆசனங்களில் சீ.வீ.கே சிவஞானம், குருநகர் பிரதேசத்தினை சேர்ந்த ஆனோல்ட், எழிலனின் மனைவி ஆனந்தி, வடமராட்சியினைச் சேர்ந்த திருமதி சிவயோகம், தென்மராட்சியில் சட்டத்தரணி சயந்தன் ஆகியோரின் பெயர்கள் உறுதி செய்யப்பட்டிருக்கின்றதாகவும் ஏனைய இரண்டு வேட்பாளர்கள் தெரிவில் இழுபறி நிலவுவதாகவும் கூறப்படுகின்றது. அந்த 2 இடங்களுக்கும் பேராசிரியர் சிவச்சந்திரன், தர்சானந்த், கனகசபாபதி, வித்தியாதரன் ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய நட்புறவில் உறுதி



(கொழும்பு)

இலங்கை - இந்தியாவிற்கு இடையில் காணப்படும் நட்புறவை யாராலும் பிளவுபடுத்த முடியாது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் யஷ்வர்தன் குமார் சிங்ஹா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பு குறித்து உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

(சிவநகர்)

மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது,

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த தம்பதியர் யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்ற காருடன் மோட்டார் (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறிரெலோ அலுவலகம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறிரெலோ அமைப்பின் அலுவலகம் மீது இனம் தெரியாதவர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு நபர்களே அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அலுவலக வாயில் கதவை அடித்துச் சேதப்படுத்திய மர்ம நபர்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

இது திசைகாட்டியில் மட்டுமே சாத்தியமாகும்
உணவு இருப்பிடம் இலவசம்
ரிக்கற் இலவசம்
கல்லூரியின் பெயர்: SAL International College மலேசியா
10 பேருக்கே வாய்ப்பு
கற்கைநெறி - 2 மாதங்கள்
ஆண்கள் O/L, வயது: 21-25
உடன் பயணம்
வெறும் 375000 மட்டும் செலுத்தி மலேசியாவில் கோட்டல் முகாமைத்துவ கற்கை நெறியில் மாதாந்தம் 40000 சம்பாதிக்கலாம் (எழுத்து மூலமான உறுதிப்பாட்டுடன்)
சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும்
எல்லா நாட்களிலும் திறந்திருக்கும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-1093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒரே நேரத்தில்

# 4 வாகனங்கள் விபத்து 4 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நான்கு வாகனங்கள் ஒரே சமயத்தில் விபத்துக்குள்ளாகியதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று இரவு 8மணியளவில் சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

இதில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டி, டிப்பர் வாகனம் ஒன்றுமே விபத்துக்குள்ளாகி உள்ளது.

வீதி அகலிப்பு பணியில் ஈடுபட்டிருந்த டிப்பர் வாகனத்தினை முந்திச் செல்ல முற்பட்ட போதே அவ்விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் சுன்னாகம் கல்லாக்கட்டுவனைச் சேர்ந்த சிவம் என்பவர் பலத்த காயங்களுடனும் ஏனைய மூவரும் படுகாயங்களுடனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

விபத்து தொடர்பான விசாரணையினை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)


## கார் விற்பனை

2000 Model Gold colour Hyundai Accent Car Manual and Auto power Setup Car உடன் விற்பனைக்குண்டு. உடனடி விலை 1250000/= மேலதிக விபரங்களிற்கு.

**0771950228**

(3428)

## காணி விற்பனைக்கு

கண்டி றேட்(A9 வீதியில்) பஸ்தியன் சந்திக்கு அண்மையில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0772259030

(3438)


# தொலைபேசியில் மோசடி பறிபோனது பணம்

பரிசு தருவார்கள் என ஆவலுடன் பணத்தை கட்டியவர் இறுதியில் ஏமாற்றத்தினையே பரிசாக பெற்றுவிட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்று உள்ளது.

தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றிலிருந்து கதைப்பதாகவும், உங்களுக்கு அழகான, வடிவான, பெறுமதியான பரிசில் கிடைக்கவுள்ளது, ஆகையினால் நாங்கள் தரும் வங்கி கணக்கிலக்கத்திற்கு பணம் வைப்பிலிடுமாறு தொலைபேசியில் கூறியே இம்மோசடி இடம்பெற்றுள்ளது.

இவ் மோசடிச் சம்பவம் நேற்றுக் காலை 11.30 மணியளவில் கரணவாய் மண்டான் பகுதியில் இடம் பெற்று உள்ளது.

இதில் 9 ஆயிரத்து 500 ரூபா பணம் பறி போய் விட்டதென பாதிக்கப்பட்டவரினால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஏமாற்று சம்பவம் ஒன்று அண்மையில் கரவெட்டியிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொலைபேசி அழைப்புகளினை நம்பி பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றால் இவருக்கு நேர்ந்தகதியே அனைவருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (செ-4,60)


## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) இந்திய சமையற் கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6–10 P.M

✦ 6 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



வெளிநாடுகளிற்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவையில் முன்னோடிகளாகிய எம்மிடம் சேவைகளை பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு

- விரைவாகவும், பாதுகாப்பாகவும், உத்தரவாதத்துடனும் பொதிகளை 4-5 நாட்களில் ஒப்படைக்கின்றோம்.
- வெளிநாடுகளில் சுங்கத்தீர்வையின்றி பொதிகள் ஒப்படைக்கப்படும்.
- உங்கள் வீடுகளிற்கே வந்து பொதிகளை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் சேவையை எம்மிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையை வழங்கிக்கொண்டிருக்கும்.

(C-4097)



**Skyway Express**

No.355A , கே. கே. வீதி, யாழ்ப்பாணம். ( சிவன் கோவில் அருகில்)

T.P No: 021 221 9792 T.P No: 021 320 2634




சித்தன்கேணி – தனுவோடைப்பதி

அருள்மிகு ஸ்ரீமத் சிவகாமசுந்தரி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்

## மஹா சங்காபிஷேக திருக்கல்யாண விஞ்ஞாபனம்

காலம் : 22.07.2013 திங்கட்கிழமை

காலை 8 மணி முதல்

1008 கலச சங்காபிஷேக யாக பூசை ஆரம்பம்

காலை 11 மணிக்கு வேத, திருமுறை, வாத்திய கீத, நிருத்த, வீணா, வேணு, மிருதங்க, நாதஸ்வர சகித கும்ப வீதி உலா

12 மணிக்கு திருக்கல்யாணம் (உபயம் : K.நடனசபை)

**விசேட மேளக்கச்சேரிகள்**

கோவிந்தசாமி குழுவினர் (தேஸ்தான வித்துவான்)

சிவகுமார் குழுவினர் (தொல்புரம்)

அன்னதான நிகழ்வும் நடைபெறும்

அனைவரும் தரிசித்து திருவருளுக்கு பாத்திரமாவீர்களாக!

சுபம்

சித்தன்கேணி சிவன் தேவஸ்தானம்.

(C-4095)

## சமுதாய மேம்பாட்டில் பால்நிலை மற்றும் பங்கேற்பு

### புலமைப்பரிசில் பயிற்சிநெறித் திட்டம் 2013

நல்லாட்சியினை நோக்காக கொண்டு இயங்கும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையமானது சமூகத்திற்கும், சமூகப்பணியிலீடுபடுவோருக்குமிடையிலான இடைவினையிலுள்ள இடைவெளியினைச் சாத்தியமானவகையில் நிரவும் பொருட்டு, 'சமுதாய மேம்பாட்டில் பால்நிலை மற்றும் பங்கேற்பு' தொடர்பானதொரு செயற்பாட்டு அடிப்படையிலான குறுகியகாலப் பயிற்சி நெறியினை யாழ்ப்பாணத்தில நடாத்தவுள்ளது. ஆர்வமும் ஆற்றலுங் கொண்ட சமூகமட்ட அமைப்புக்களில் அங்கத்துவம் வகிப்போரையும், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள்,தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் தொடர்புடைய உயர் கற்கைநெறிகளில் ஈடுபடும் மாணவர்களையும் நாம் இதில் பங்குபற்ற அழைக்கின்றோம்.

சமுதாயப் பணிகளில் ஈடுபடும் சமுதாயத் தலைவர்கள், மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் தமது பணிகளில் மேலும் தம்மை இணைத்துக் கொள்வதற்குரிய அறிவை ஆழப்படுத்தி, வருங்காலத்தில் தமது பணியில் சமூகநீதியுடன் செயற்படுவதற்கான தகைமையினையும் இப்பயிற்சிநெறி அளிக்கும். சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்புச் செயன்முறைகளின்வழி பொறுப்புக் கூறல், பால்நிலை, நீதி, சமத்துவம் என இன்னோரன்ன அணுகுமுறையுடன விடயங்களை அணுகுதல், பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்பாடல்களினை மேமபடுத்தல் போன்றவற்றுக்கான முறையியற் பயிற்சியினையும இப்பயிற்சி அடிப்படையாகக் கொண்டுள்ளது. எண்ணக்கருக்கள் கோட்பாட்டுரீதி யிலான விளக்கங்களினைப் பெறல், பிரயோக அறிவினைப் பரீட்சிப்பதற்கான பிரதேசங்களுக்கிடையிலான களவிஜயங்கள் மற்றும் இதர நாடுகளில் பணி புரியும் பால்நிலை மற்றும் சமூகப்பணி சார்ந்த நிபணர்களுடனான சந்திப்புக்கள் என்ற அடிப்படையில் இப் பயிற்சிநெறி அமையும். திட்டமுன்மொழிவுகள் தயாரித்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான சுட்டிகள் தயாரித்தல், அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பணங்களை வழங்குதல் போன்றவற்றிலும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

* பயிற்சிநெறியின்போது கட்டாயமாகக் களப்பணிசார்ந்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்குப் பயிலுனர்கள் வேண்டப்படுவர். சமூகமட்ட அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கும் பயிலுனர்களுக்கான பயிற்சிகள் தனியாகவும், ஏனையோருக்கான பயிற்சிகள் தனியாகவும் இடம்பெறும். இருபத்தைந்து விண்ணப்பதாரிகள் மட்டும் ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படுவதுடன் அவர்கள் முழுமையாகப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவார்கள். பயிற்சிநெறியானது ஆவணி மற்றும் புரட்டாதி மாதங்களின் வார இறுதி நாட்கள் மற்றும் அரசவிடுமுறை தினங்களில் நடைபெறும். தேவைப்படுமிடத்து நான்கு நாட்கள் கொண்ட வதிவிடப்பயிற்சியும் வெளிமாவட்டத்தில் நடத்தப்படலாம். உங்கள் கல்வித் தகுதி, பணி மற்றும் இதர விபரங்கள் அடங்கிய சுயவிபரக கோவையினைத் தயாரித்து அனுப்ப வேண்டும்.

**வயதெல்லை: 24-45 வயதுக்குட்பட்ட ஆண்-பெண் இரு பாலாரும்.**

**விண்ணப்ப முடிவுதிகதி: 30.07.2013**

அனுப்பவேண்டிய முகவரி: நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், விழுது, இல 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

ஈமெயில்: info@viluthu.org

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: **0212229866/ 0112506272**

Viluthu
3, Torrington Avenue, Colombo-07

(3454)


# மனதார வாழ்த்துகின்றோம்



தகவல் தொழில்நுட்ப நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றுத்தந்து எமது வாழ்க்கைக்கு வழிகாட்டிய கௌரவ

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்) அவர்களை மனதார வாழ்த்துவதில் மனம் நெகிழ்கின்றோம்.

அத்துடன் இதற்கு ஒத்துழைப்பு தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழ்த்துவோர் : புதிதாக நியமனம் பெற்ற தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் (HNDIT - ATI,JAFFNA)

(3436)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ராணி இருந்தார்.

ராஜாவினுடைய அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கமாக இருந்தது. வருகிற ஞானிகள் கூறும் உபதேசங்களையெல்லாம் அந்த ராணி அவதானமாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அதனுடைய விளைவு, அவளும் ஒரு ஞானி ஆகிவிட்டாள். ஞானி மட்டுமல்ல... தன்னுடைய உருவத்தை மாற்றி விட்டு ஆகாயத்திலே பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைக்கப் பெற்றது. நினைத்தால் ராணி எங்கேயும் பறந்து உலா வரலாம்– அப்படிப்பட்ட சக்தி அவளிடம் வந்து விட்டது.

உடனே ராஜா– ராணியிடம் சென்று– ''இதோ பார்! நானும் உன்னை மாதிரியே ஞானி ஆக வேண்டும். எனக்கும் ஏதாவது உபதேசம் செய்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராணி, ''நீங்கள் ஞானி ஆக வேண்டுமென்றால் அனைத்தையும் துறந்து, தயாராக ஒரு நிலைப்பட வேண்டும். உங்களை விட்டு வைராக்கியம் இன்றும் போகவில்லை'' என்று கூறினாள்.

"சரி" என்று அமைதியாக ராஜா இருந்து விட்டார்.

நாட்கள் நகர்ந்தன; ராஜா காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டுமென ஆசைப்பட்டார். ஆனால், ராணிக்கு விருப்பமில்லை. அதனால் அவர் சம்மதப்படவில்லை.

ராஜாவுக்கா வழி தெரியாது? அவர் சொல்லாமல் ஒரு நாள் இரவு காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

ஆகாயத்திலே பறக்கிற சக்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்தபடியால் இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார்.

புறப்பட்டுப் பறந்து போனாள் காட்டுக்கு... ராஜா இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டாள்.

நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினாள். இந்த இளம் முனிவர் அதுதான் அந்த ராணி.

ராஜா இந்த இளம் முனிவரைப் பார்த்ததும் தலை வணங்கினார்.

"நான் நீண்ட காலமாக தவம் செய்கிறேன். மன நிம்மதி எனக்கு இன்னும் கிட்டவில்லை. தாங்கள்தான் அருள் புரிய வேண்டும்" என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர்; ''அனைத்தையும் துறக்க வேண்டுமென்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பின்னர் அனைத்தையும் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார்.

"அனைத்தையும் விட்டு விட்டேன். இன்னும் இந்த ஆசிரமத்தைத்தான் விடவில்லை" என்று சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப் போனார்.

இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார்.

"உடம்பு உங்களுக்குச் சொந்தம் இல்லை... அதெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு சொந்தம்'' என்றார்.

ராஜா சிறிது நேரம் யோசித்தார். "அப்படியென்றால், எனக்கு என்னதான் சொந்தம்?'' என்று கேட்டார்.

"உங்கள் அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் உங்களிடம் இருந்து துறக்க வேண்டியது அதைத்தான். அதை விட்டு விடுங்கள் முதலிலே. அது உங்களிடம் இருப்பதால்தான் இந்த உலகமே உங்களிடம் இருக்கிறதாக நினைக்கிறீர்கள். அகங்காரம் இருக்கிறதால்தான் இந்த உலகப் பொருட்கள் உங்களுக்குச் சொந்தமென்று தோன்றுகிறது" என்று இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி கூறினார்.

உடனே ராஜா "இதோ என்னிடம் இருக்கிற அகங்காரத்தை விட்டு விடுகிறேன்'' என்றார்.

அதன்பின்தான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்கு கிடைத்த மாதிரியான சித்தி அவருக்கும் கிடைக்கப்பெற்றது.

இந்தக் கதையை ஒருவருக்கு மிகவும் உணர்வு பூர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் உடனே சொன்னார்;

சித்தியடைவதற்கு அந்த ராஜா எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார்.

நான்கூட சித்தி அடைந்திருக்கிறேன். ஆனால், அவ்வளவு கஷ்டப்படவில்லை. உங்களுக்கு சுலபமாக "சித்தி" கிடைக்கப் பெற யார் காரணம்? என்று கேட்டேன்.

"எங்கள் அப்பாதான் காரணம் அவர் இரண்டாவதாக ஒரு கல்யாணம் செய்தார். உடனே "சித்தி" வீட்டுக்கு வந்து விட்டார்.

"எனக்கு சித்தி கிடைத்த கதை" இது தான் என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# ஐரோப்பிய ஒன்றியத்தின் வருகைக்கு தடை கூறமுடியாது

## தேர்தல் ஆணையாளர்

எதிர்வரும் செப்டெம்பரில் நடக்கவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு கதவை மூடப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளில் பிரதிநிதிகளை தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கக்கூடாது என சில கட்சிகள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் பிரதிநிதிகளை தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கக்கூடாது என்று தாம் கேட்டுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் அவ்விடயத்தைக் கூறிய நபரை யார் என்று வெளிப்படுத்தாமல் அவரே கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் தாம் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களை அழைப்பதில்லை என்று முடிவு ஏதும் எடுக்கவில்லை என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் அவர் தெரிவித்துள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐரோப்பிய ஒன்றியம் பொதுநலவாய தலைவர்கள் மகா நாடு, ஆசிய கண்காணிப்புக் குழுக்கள் இரண்டு என்பன தமது பிரதிநிதிகளை கண்காணிப்பதற்கு அனுப்பின.

செப்டெம்பர் தேர்தலைக் கண்காணிக்க அவர்களில் இருந்தே தெரிவுசெய்யப்படுவர்.ஜெனீவாவில். இலங்கைக்கு எதிராக வாக்களிக்க நாடுகளின் பிரதிநிதி களை கண்காணிப் புக்கு அழைப்பதற்கு அரசியல்கட்சிகள் சில எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் குறித்து இறுதி முடிவை நானே எடுப்பேன்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க ஐரோப்பிய ஒன்றியம் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளை கண்காணிப்புக்கு அழைக்கப் போவதில்லை என்று நான் முடிவெடுத்து விட்டதாக வெளியான செய்திகளில் எந்த அடிப்படையும் இல்லை.

ஜெனீவா வாக்கின் அடிப்படையில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் குறித்து முடிவெடுக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறியுள்ளார். (அ–2)

# மீட்கப்பட்ட கொள்கலனில் 2,395 துப்பாக்கி ரவைகள்

## கோப்பாய் பொலிஸ் பிரிவு தகவல்

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட இரண்டு கொள்கலனில் இரண்டாயிரத்து 395 துப்பாக்கி ரவைகள் இருந்ததாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சஞ்சீவ சிறிநிக ஜெயக்கொடி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதி அகலிப்பு பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்த துப்பாக்கி ரவைகள் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகளில் ரி–56 வகை துப்பாக்கியின் 915 ரவைகளும் எம்.பி. எம்.ஜி–வகை ஆயிரத்து 480 ரவைகளும் காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ–6)

# குணபாலன் வித்தி. பரிசளிப்பு விழா

யா/உயரப் புலம் குணபாலன் வித்தியாலய நிறுவுநர் நினைவு தினம் மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா என்பன இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணிக்கம் பாக்கியம் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜி.டி.தேவராஜா, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசா, கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் லயன் எஸ். நாகையா, பழைய மாணவர் மயூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளுக்கான ஆசியுரையை உத்துங்க விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.க.குகதாசக் குருக்களும் நிறுவுநர் தின உரையை உயரப்புலம் மெடிஸ்த மிஷன் தமிழ் கலவன் வித்தியாலய ஆசிரியர் யோ. விஜேந்திரனும் வழங்கவுள்ளனர். மேற்படி நிகழ்வில் முன்னைய நாள் ஆசிரியர்களான என்.விக்னேஸ்வரன், எஸ்.சிவசுதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதுடன் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ–5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-160 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 120 |
| தக்காளி | 100 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 100 | 130 | 120 |
| கரட் | 140 | 100 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 140 |
| பாகற்காய் | 60 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 200 |
| போஞ்சி | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | – |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 |

# இராசி பலன்

*22.07.2013*
*(ஆடி 06, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*பூரணை பின்னிரவு 12.42 மணிவரை*
*பூராடம் முற்பகல் 9.19 மணிவரை*
*இராகுகாலம் 7.31-9.01 மணிவரை*
*சுபநேரம் 12.01-1.31 மணிவரை*
*பட்டினத்தார் குருபூசை,முழு நோன்மதி தினம் பூரணை விரதம்*

**மேடம்** நல்லவர்களை சந்தித்து நலம் காண்பீர்கள், நேற்றைய பிணக்கொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், பூர்வீக சொத்துக்களால் நன்மை உண்டு.

**இடபம்** கடவுளை வழிப்பட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உற்றார் உறவினரிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், கைமாற்றாகக் கொடுத்த பணம் கைக்கு கிடைக்கலாம்; கௌரவமான நாள்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் சந்தோசமான செய்திகளைக் கேட்பீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடரும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** சொன்ன சொல்லினைக் காப்பாற்ற கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயண சுகமுண்டு.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், மாதர் நட்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தொழில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் நன்மை தரும், பண வரவுகள் திருப்தி தரும், கௌரவமான நாள், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், தொழில் நன்மை கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த கூட்டாண்மை குடிமகன் விருது வழங்கும் நிகழ்வு






இலங்கை வர்த்தக சம்மேளனம மீண்டும் ஒருமுறை உள்நாட்டில் சிறப்பாக வணிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாண்டு 'சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலையாண்மை விருது' (Best Corporate Citizen Sustainability Award) நிகழ்வினை நடத்தவுள்ளது.

10ஆவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடும் இத்தருணத்தில் இவ்வாண்டின் தொனிப்பொருளாக 'கூட்டாண்மை குடியுரிமையின் ஒரு தசாப்தத்தை கொண்டாடுதல்' என அமைந்துள்ளது.

இவ்வாண்டு நிகழ்விலும் 10 முன்னணி கூட்டாண்மை நிறுவனங்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் கடந்த பல ஆண்டுகளாக கூட்டாண்மை நிறுவனத்துறையில் வளர்ச்சிப் பண்புகளையும் கவனத்தையும் செலுத்தும் துறைசார் ஜாம்பவான்களாகிய ஜோன் கீல்ஸ், எயிட்கன் ஸ்பென்சஸ், ஹேலீஸ், சிங்கர், சிலோன் பிஸ்கட் லிமிட்டட், டீசல் அன்ட் மோட்டார் எஞ்சினியரிங் (டீமோவின்), தேசிய அபிவிருத்தி வங்கி (NDB), பீபிள்ஸ் லீசிங் மற்றும் பல அமைப்புகள் சமூகத்தின் மிகப் பெரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பை வழங்கிய கூட்டாண்மை நிறுவனங்கள் பல அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வருட விருது வழங்கும் நிகழ்வில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பினை ஏற்று அதனை ஊக்குவிக்கும் மற்றும் அப் பிரதேசத்தில் முன்மாதிரியாகவும் திகழும் நிறுவனங்களின் நிலையாண்மைக்கான வலுவான பங்களிப்பு அடையாளப்படுத்தவுள்ளது.

'கடந்த தசாப்தமானது இலங்கையின் கூட்டாண்மை குடியுரிமை துறையின் திருப்புமுனையாக அமைந்திருந்தது' என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொது செயளாளர் ஹரின் மல்வத்த தெரிவித்தார்.

இவ் விருதானது தொடர்ச்சியாக மக்கள், சமூகம் மற்றும் சுற்றுச் சூழல் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வெற்றிகரமான நிறுவனங்களைக் கௌரவிக்கிறது.

இவ் விருதுகள் வழங்கும் நிகழ்வில் தனியார் மற்றும் பொதுத் துறையினர் விண்ணப்பிக்க முடியும் என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர் சமந்த ரணதுங்க தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் செப்டம்பர் 27 -ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

# சீமெந்தின் கேள்வி அதிகரிக்கும் -டோக்கியோ

இலங்கையில் இந்த ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில் சீமெந்துக்கான கேள்வி 7 வீதத்தால் வீழ்ச்சியடைந்த போதிலும், ஆண்டு ஒன்றுக்கு 10 வீதம் எனும் அடிப்படையில் மத்தியளவு அதிகரிப்பை இலங்கை எதிர்கொள்ளும் என இலங்கையில் இயங்கும டோக்கியோ சீமெந்து நிறுவனம் அறிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் இலங்கையில் சீமெந்துக்கான கேள்வி 12 வீதமாக பதிவாகியிருந்தது. ஆயினும், 2012ஆம் ஆண்டிலும், இந்த ஆண்டின் முற்பகுதியிலும் நிர்மாணத்துறையில் காணப்பட்ட மெதுவான செயற்பாடுகளின் காரணமாக சீமெந்துக்கான கேள்வி சரிவடைந்துள்ளதாக டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர். ஞானம் குறிப்பிட்டுள்ளார்.

## சைபர் தாக்குதல்

# அபாய நிலையில் ப.சந்தைகள்

கடந்த ஆண்டில் உலகின் பெரும்பாலான பங்குப்பரிவர்த்தனை நிலையங்களின் செயற்பாடுகளை சைபர் தாக்குதல்களுக்கு உட்படுத்த இலக்கு வைக்கப்பட்டிருந்ததாக 46 பங்குப் பரிவர்த்தனைகள் மீது மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்விலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்களின் மூலம் பங்குப்பரிவர்த்தனையின் செயற்பாடுகளை நிலைகுலையச் செய்வதுடன், மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துவ்தும் இந்த இலக்கு வைத்தவர்களின் நோக்கமாக அமைந்திருந்தது.

பெரும்பாலான நிதிக் கொடுக்கல வாங்கல்கள், பரிவர்த்தனை நடவடிக்கைகள் போன்றன கணனிமயப்படுப்பட்ட கட்டமைப்பிலேயே பெருமளவு தங்கியுள்ளன. இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையங்களில் 53 வீதமான நிலையங்கள் தாம் கடந்த ஆண்டு சைபர் தாக்குதல்களுக்கு இலக்காகியிருந்தமையை உறுதி செய்திருந்தன. பொதுவான தாக்குதல்களாக சேவை வ்ழங்குதல்களை இடைநிறுத்தல், வலைப் பின்னல்கள் மற்றும் இணையத் தளங்களை வைரஸ்களை செலுத்தி செயலிழக்கச் செய்தல் போன்றன அமைந்திருந்தன.

மேலும், மடிக்கணினிகள் திருட்டு, இணையத்தளங்களை வேவுபார்த்தல், தரவுகள் திருட்டு மற்றும் உள்ளக விபரங்கள் திருட்டு போன்றனவும் இடம்பெற்றிருந்ததாகவும், எவ்விதமான நிதி திருட்டுகளும் இடம்பெறவில்லை என ஆய்வில் பங்கேற்ற பங்குப் பரிவர்த்தனைகள் தெரிவித்திருந்தன.




# ரூபாயின் பெறுமதிக்கு தொடர்ந்து அழுத்தம்

கடந்த் வாரம் டொலருக்கு நிகரான ரூபாவின் சராசரி விற்பனை பெறுமதி 133.15 ஆக பதிவாகியிருந்தது.

ஐக்கிய இராச்சிய பவுணுக்கு நிகரான சராசரி விற்பனை பெறுமதி 197.41 ஆக காணப்பட்டிருந்தது. தொடர்ந்தும் டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி குறைவடைந்த நிலையிலேயே கடந்த வாரமும் காணப்பட்டது.

இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்ந்து அதிகளவு பங்கு விற்பனையில் ஈடுபாட்டை காண்பித்து வருகின்றமையால், பங்குக் கொடுக்கல் வாங்கல்கள் கடந்த வாரமும் சரிவான பெறுமதியைப் பதிவு செய்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகளின் மீது அதிகளவு கேள்வி நிலவியதன் காரணமாக சந்தை கடந்த ஒருவார காலப்பகுதியில் பதிவான உயர்ந்த பெறுமதியை பதிவு செய்திருந்தது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் அழுத்தத்தை எதிர்நோக்கிய வண்ணமுள்ளது. நாணயக் கொள்கையில் மத்திய வங்கியின் இறுக்கத்தை ஏற்படுத்தாவிடின், தொடர்ந்தும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும் என நாணயமாற்று முகவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 6,041.06 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3409.16 ஆகவும் அமைந்திருந்தன.

ஜூலை 15ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 2,754,[illegible] அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 21,035 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 20,089 ஆகவும் வெளிநாட்டு கொடுகல் வாங்கல்கள் 946 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்தவார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சுவதேஷி, செரண்டிப் லாண்ட், நமுனுகுல, ஈக்குவிட்டி டூ பிஎல்சி மற்றும் யூனியன் கெமிக்கல்ஸ் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

ஓஃபிஸ் இக்யுப்மன்ட், சிலோன் பிரின்டர்ஸ், குட் ஹோப், மெக்வூட்ஸ் எனர்ஜி மற்றும் பிசி பார்மா போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

# Dash துணி துவைக்கும் சவர்க்காரம் சந்தைக்கு அறிமுகம்

உயர்ரக தரத்தை கொண்ட உற்பத்திகளை மக்களுக்கு வழங்கி வருகின்றதும் துப்பரவு செய்யும் வர்த்தக நாமத்தை கொண்டதுமான dashஇன் புதிய துணி துவைக்கும் சவர்க்காரம் அண்மையில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. dash சவர்க்காரத்தின் விசேட அம்சம் என்னவெனில் அது TFM தரத்தை கொண்டதாக அமைந்துள்ளமை.

TFM எனப்படும் Total Fatty Matter என்பது சவர்க்காரத்தின்



தரத்தை அளக்க பயன்படுத்தப்படும் அளவீடாகும். அத்துடன் சவர்க்காரத்தின் எடையுடன் ஒப்பிடுகையில் காணப்படும் முழுக் கொழுப்பின் அளவையும் TFM மூலம் அறிந்து கொள்ளலாம். இலங்கை தர கட்டுப்பாட்டு நிறுவனத்தின் 554 -ம் இலக்க தரத்துக்கமைய துணி துவைக்கும் சவர்க்காரத்தில் 59 % TFM அடங்கியிருத்தல் வேண்டும்.

dash சவர்க்காரத்தை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் வைபவம் மல்டிகெமி நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த குமாரசிங்கவின் தலைமையில் அண்மையில நடைபெற்றது.

இந்த வைபவத்திற்கு நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது கருத்து தெரிவித்த மல்டிகெமி இன்டர்நஷனல் நிறுவனத்தின் பொது முகாமையாளர் டிக்கிரி செனவிரத்ன,

dash ஊடாக மக்களுக்கு புதிய துணி துவைக்கும் சவர்க்காரம் கிடைக்கப்போகின்றது. அதற்கமைய சந்தையில் காணப்படும் ஏனைய சவர்க்காரங்களுடன் புதிய தரத்துடன் வந்திருக்கும் சவர்க்காரத்தை ஒப்பிட்டு பார்த்து மக்களுக்கு தரத்தை அறிந்து கொள்ள முடியும் என தெரிவித்தார்.

# அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளது

தங்கத்தின் விலை குறைவடைந்தமை, சர்வதேச நாணய நிதியத்திற்கு கடன் செலுத்துகின்றமை போன்றவை காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளது.

கடந்த மே மாதம் 6.85 பில்லியன் அமெரிக்க டொலர் முதல் 6.6 வரை குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்திற்கு 225.5 மில்லியன் அமெரிக்க டொலர்களே செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, தங்கத்தின் விலை குறைவடைந்தமை காரணமாக 312 மில்லியன் அமெரிக்க டொலர்கள் குறைவடைந்துள்ளன.

# தங்கம் யாரும் வாங்க வேண்டாம்

## சிதம்பரம் யோசனை

நாட்டு மக்கள் அனைவரும் ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை நிறுத்தினால் இந்திய ரூபாயின் மதிப்பு உயரும் என இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு யோசனை தெரிவித்துள்ளார். தமது வேண்டுகோளுக்கு மக்கள் ஒததுழைப்பு அளித்தால் நடப்பு கணக்கு பற்றாக் குறையும் குறைத்துவிடலாம் என்றும் கூறியுள்ளார். அந்நியச் செலாவணி ஈட்டுவது அதனைச் செலவழிப்பதைப் பொறுத்தே



ரூபாயின் மதிப்பு உயருவதும், சரிவதும் அமையும் என்று அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், நாட்டு மக்கள் அனைவரும் ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை நிறுத்தினால் சுமார் 5000 கோடி டொலர் அளவுக்கு அந்நியச் செலாவணி மிஞ்சும் என்றும் ப.சிதம்பரம் விளக்கம் அளித்தார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.95 | 133.15 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 197.41 | 203.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 169.62 | 175.31 |
| சுவிஸ் பிராங் | 136.80 | 142.09 |
| கனேடிய டொலர் | 124.54 | 129.08 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.40 | 123.03 |
| சிங்கப்பூர் டொலர் | 101.93 | 105.50 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.76 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கோர் வரப்பிரசாதம்!!

தவறவிடாதீர்கள்!

ஜப்பான் வீசா

வயது எல்லை 18 - 35

- முதன் முறையாக ஜப்பான் நாட்டில் கல்விபயில, தொழில் ஒன்றைச் செய்வதற்கான அரிய வாய்ப்பு... மாதவருமானம் 250,000/= முதல் 300,000/= வரை
- ஜப்பான் நாட்டில் 50 கல்வி நிலையங்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு...
- 2 வருட கற்கை வீசா மற்றும் தொழில் வாய்ப்பு...

நவம்பர் மாத இறுதிக்குள் எல்லா ஆயத்தங்களும் பூர்த்தி

**27.07.2013 அன்று காலை 09.00 மணிக்கு**

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலசவ கருத்தரங்கு**

ஜப்பானிய கல்வி நிறுவக அதிகாரிகளுடனான நேரடி சந்திப்பு

உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்குமான அவர்களின் விளக்கங்கள்...



27ஆம் திகதி அன்றே நுழைவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

(Spot Admission & Enrolement)

தரகர்கள் அற்ற சிறந்த நேரடிச் சேவை

(சி/4091)

**AKIKO JAPANESE LANGUAGE & TRAINING CENTER (PVT) LTD.**

No.51/2, Old Camp Road, Dalugama, Kelaniya.

Web: www.akiko.lk E-mail: akiko.shermila@gmail.com

தொடர்புகளுக்கு:

தர்ஷினி - 077 445 2087 (யாழ்ப்பாணம், வடபிராந்தியம்)

ஸ்ரீதரன் - 077 193 8290 (கொழும்பு)

அனுமதி இலவசம் Entrance free


## யானை தாக்கியதில் அதிகாரி பலி

காட்டுயானைதாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். லுனுகம்வெஹெர சரணாலயத்தில் பணி புரிந்து வந்த வன விலங்கு அதிகாரியொருவரே இவ்வாறு காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் காலி ஜிந்தொட்டயைச் சேர்ந்த தினேஷ் அமில ஜயவர்தன என்ற 24 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியில்நுழைந்தயானையொன்றை விரட்டும் பொருட்டு அங்கு சென்ற போது அவர்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். (அ-2)


# யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடாத்தும் நிலாக்கால நிகழ்வு



மங்கல விளக்கேற்றல்:- திரு.திருமதி ஐ.சண்முகலிங்கம்

கடவுள் வாழ்த்து:- திருமதி ஜீவன்தனி லம்போதரன் (இசை ஆசிரியை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

வரவேற்புரை:- திரு.லோ. துஷிகரன்

தலைமையுரை:- திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் (பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

நிகழ்வு:- பட்டி மண்டபம்

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்

காலம்:- 22.07.2013 திங்கள்

நேரம்:- மாலை 4.30 மணி

**பட்டி மண்டபம்:-**

நடுவர்:- கம்பவாரிதி இ.ஜெயராஜ்

இன்று பாரதி வந்தால் எதனைப் பெரிதும் வலியுறுத்துவான்

பெண் விடுதலையை- திரு. இரா. செல்வவடிவேல், திரு. ச.லலீசன்

மொழிப்பற்றை:- திரு.ந.விஜயசுந்தரம், திரு. அ.வாசுதேவா

சமுதாய உணர்வை- கலாநிதி ஸ்ரீ . பிரசாந்தன், திரு. ச.மணிமாறன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**"கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்"**

த. ஜெயசீலன் பெருந்தலைவர் | லோ. துஷிகரன் தலைவர் | அ.வாசுதேவா செயலாளர் | கி.கிருபானந்தா பொருளாளர்

(இ)



**Hatton National Bank**

# அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம், முல்லைத்தீவு, சாவகச்சேரி, கைதடி, வேலணை, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, பருத்தித்துறை, கொடிகாமம், மானிப்பாய், நெல்லியடி, திருநெல்வேலி ஆகிய கிளைகளில் 31.05.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 24.07.2013 தொடக்கம் 29.07.2013 (புதன்-திங்கள்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணிவரை **இல. 212,214,** ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

***உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியா விட்டால்...***

✦ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி காலாவதி திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு .

(சி-4077)

*-ஹற்றன் நஷனல் வங்கி-*



# இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 18+02 யாத்திரிகர்கள்: 10 ஆரம்பம் 05.09.2013

நிறைவு: 25.09.2013

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர், திருப்பதி, ஆறுபடை வீடுகள், மாங்காடு, வேற்காடு புவனேஸ்வரி, காஞ்சி காமாட்சி, காஞ்சி வரதர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 9 நவக்கிரக ஆலயங்கள், வேளாங்கண்ணி, அஷ்டலெட்சுமி, அலமேலுமங்கா, சீரடிபாபா சென்னை, திருநாரையூர், சரஸ்வதி கோவில், வலஞ்சுழி விநாயகர், திருக்கடையூர் அபிராமி, சக்தி அம்மன் கோவில், மீனாட்சி சுந்தரேஸ் வரர், இராமேஸ்வரம் சோட்டாணிக்கரை, கொடுங்களூர், குருவாயூர், பொற்கோவில், தோணியப்பர், சிதம்பரம், சீர்காழி, மருத்தீஸ்வரர், பட்டீஸ்வ ரம் துர்க்கா, சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகுமரி, கபாலீஸ்வரம், காளகஸ்திரி, பார்த்தசாரதி, குபோலிங்கேஸ்வரர், உத்திரகோச மங்கை, திருப்புவானி, நவபாஷாணம், சுசீந்திரம் திருக்கோவில், வனத்திருப்பதி, உவரிசிவன், தாராசுரம்சிவன், ஊட்டி, பாண்டிச்சேரி, மெரீனா பீச்சும் காணலாம், ரிஷி வந்தியம் பாகம் பிரியாள் அம்மன் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை...

இருவழி விமான ரிக்கெட், ஏயார் போட் செல்லவும் திரும்ப வரவும் வாகன வசதி, காலையும் இரவும் கோப்பி, ரிபன், தரமான சைவ மதிய உணவு, ஹோட்டல்களில் சாதம், நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு லீற்றர் மினரல் வோட்டர் (குடிநீர்), தங்குமிடங்கள், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தையுடன் குளியல் அறையுடன் கூடிய அறைகள் எடுத்துத் தங்க வைக்கப்படுவார்கள்.

யாத்திரை தொடங்கி முடியும் வரை AC, Audio, Vedeo, உள்ள சொகுசு வாகன வசதி,

**கட்டண விபரம் கேட்டு அறிக!**

விருப்பமுடையோர் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு: **கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்,**

**No: 66/2-3/2 JOSEPH DIAS LANE**

**COLOMBO-15**

**T.P:0777680102, 0724222989**

**Web:www.Sridevipilgrims.com**

(சி/4078)

**இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்கமைய சேவைநலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகிறது.**



# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து (விஸ்வகுலம்)
நட்சத்திரம்: பூரட்டாதி 1
உயரம்: 5' 4"
கி.பா : 62.75 செ : 7
தகைமை/தொழில்: A/L (IT)
அவுஸ்திரேலியா PR
தொ.இ:B2067

பிறப்பு: 1984 இந்து(V)
நட்சத்திரம்: பூசம் 3
உயரம்: 5'6"
கி.பா : 36, 8 இல் செவ்.
தகைமை/தொழில்: civil Eng. (Oman)
தொ.இ:B2073

பிறப்பு: 1974 இந்து(V)
நட்சத்திரம்: விசாகம் 4
உயரம்: 5'4"
கி.பா: 25.75
தகைமை/தொழில்: A/L
கனடா பிரஜை
தொ.இ:B2075

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி 3
உயரம்: 5'3"
கி.பா: 20, 4 இல் செவ்.
தகைமை/தொழில்: A/L
(டுபாய்)
தொ.இ:B2076

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து(V)
நட்சத்திரம்: ரோகினி 3
உயரம்: 5'4"
கி.பா : 56, 8 இல் செவ்.
தகைமை/தொழில்: B.A தையல், மணப்பெண் அலங்காரம்
தொ.இ: G2072

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா : 63.75, 8 இல் செவ்.
தகைமை/தொழில்: Bsc ஆசிரியை
தொ.இ:G2074

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா : 11.5 , 10 இல் சூரி.செவ்.
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: College of (Edu) Teaching)
தொ.இ:G2077

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம்: பரணி
கி.பா:- 16.5, 4 இல் செவ்.
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Following MD (Doctor)
தொ.இ: G2080

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன உரிமையாளர்களுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்

(கரவெட்டி)


நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகன உரிமையாளர்கள், சாரதி அனுமதிப் பத்திரமில்லாத நபர்களுக்கு தமது வாகனங்களை செலுத்த அனுமதிக்க கூடாதென நெல்லியடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி அங்கொல பாமினி விஜயசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி பிரதேசத்திலுள்ள வாகன உரிமையாளர்கள் சாரதி அனுமதிபத்திரமில்லாத நபர்களுக்கு தமது வாகனத்தை வழங்கக் கூடாது எனவும், மீறி செயற்பட்டால் வாகன உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகன சாரதி அனுமதிப்பத்திரமில்லாது பயணிப்போர் போக்குவரத்து பொலிஸாரைக் கண்டவுடன் அதிக வேகமாக வாகனத்தை திருப்பி செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே தாம் அவ்வாறு ஓடும் வாகங்களை அவதானித்து, இலக்கங்களை பதிவு செய்து குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யும் போது அவ் வாகனத்திற்கு வேறொரு உரிமையாளர் இருப்பதனால் அவ் வாகன உரிமையாளருக்கும் எதிராக வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

ஆகவே, வாகன உரிமையாளர்கள், வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு தமது வாகனங்களை வழங்க கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-24)




நன்றி: ஐலண்ட்

# மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவிகள் தங்கியிருந்த வீட்டின் மீது இனம் தெரியாத நபர்கள் மதுபான போத்தல்களினாலும் கற்களினாலும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.**



இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் கம்பஸ்லேனில் உள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து நேற்று காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை அங்கு பெரும் பரபரப்பு நிலவியதோடு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதுதவிர குறித்த வீட்டில் தங்கியிருந்த மாணவிகள் உடனடியாக அங்கிருந்து வெளியேறி பல்கலைக்கழக விடுதிக்கு சென்றனர்.

இதேவேளை குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சஞ்சீவ சிறிநிக ஜெயக்கொடி உள்ளிட்ட பொலிஸார் அங்கு விரைந்து வந்து விசார ணைகள் மேற்கொண்டனர்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக ஜெயக்கொடி தெரிவிக்கையில்,

தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

அத்தோடு இங்கு தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவிகளை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார். (அ-6)




# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

கரவெட்டி மத்தோணி பகுதியில் தகராறில் ஈடுபட்ட வயோதிபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடி நகரப் பகுதியில் தொலைபேசி கடையை நடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் அப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் 75 இலட்சம் ரூபா பணத்தை பெற்று தலை மறைவாகிய சம்பவம் தொடர்பாக குறித்த பெண்ணும் தாயும் தலைமறைவாகிய வர்த்த கரின் தந்தை வீட்டுக்கு சென்று பணத்தை மீள கேட்ட போது, தந்தைக்கும் இரு பெண்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பில் முடிந்தது.

குறித்த வயோபதிபர் தம்மை தாக்கியதாக இரு பெண்களும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

இதையடுத்து, குறித்த வயோதிபரைக் கைது செய்த பொலிஸார் அவரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீ நிதிநி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-24)

# யோகா வகுப்புகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா அரங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள யோகா வகுப்புகளிற்கான அறிமுகவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் அரங்க இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யோகா முறையில் ஆரோக்கிய வாழ்வை அமைத்தல் என்னும் கருப்பொருளிலான கருத்துரையை யோகா போதனாசிரியர் வி.என்.சிவா வழங்கவுள்ளார்.

மேற்படி யோகாசன வகுப்புகள் தினசரி செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை நடைபெறவுள்ளதாகவும் இதில் பங்கு பற்ற ஆர்வம் கொள்ளும் அனைவரும் அறிமுக விழாவிலும் வகுப்புகளிலும் கலந்து கொண்டு பயன் பெறமுடியும் என யாழ். யோகா அரங்கம் அறிவித்துள்ளது. (அ-6)

# கால்நடைகளால் பயிர்கள் அழிப்பு

## விவசாயிகள் கவலை

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு பகுதிகளில் விவசாயிகளின் பயிர்களை கால்நடைகள் அழிப்பதால் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள அத்தாய் தாமன் தோட்டம், கருகம்பல், ஒத்துராய் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வெங்காயம் மற்றும் மரக்கறிப் பயிர்களை துன்னாலை, கிராவலை பகுதிகளிலிருந்து வரும் கால்நடைகள் அழித்து வருகின்றன.

இக் கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் கட்டி வளர்க்காத காரணத்தால் தோட்டத்தில்யாருமில்லாத நேரத்தில் பயிர்களை கால்நடைகள் நாசம் செய்வதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கால்நடை உரிமையாளர்களிடம் பலமுறை விவசாயிகள் தெரிவித்தும் அவர்கள் இவ் விடயத்தில் அக்கறை காட்டவில்லை.

இச்சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.எனவே இது தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-24)

# செயலமர்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த வகை 3 பாடசாலைக்குரிய பாடசாலை மேம்பாட்டுத் திட்ட செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.


எனவே அனைத்து அதிபர்களையும் ஒவ்வொருபாடசாலைகளிலிருந்து ஆசிரியர் ஒருவரையும் இச் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிழல்கள்











யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் அவர்களின் மணிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலையின் பிரதி அதிபர் சி.தர்மஜீலன் தலைமையில் நடைபெற்றபோது...


(படங்கள்:- உ.சாளீன்)






வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தின்ர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மா.சின்னத்தம்பி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.








புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புற்றளை சித்தி விநாயகர் பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் எஸ்.கணேசலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வடக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் சிறாருக்கு பரிசில் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தும்பளை செய்தியாளர்)







கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலய கல்விக்கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது...



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வருடாந்த ஆங்கில தினம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது...



முன்னாள் உடுப்பிட்டி மற்றும் நல்லூர்த் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகருமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் 90 ஆவது பிறந்தநாள் நினைவுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இதில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதையும் தமிழர் விடுலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினர் ஈடுபடமாட்டார்கள்

## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தும் திட்டம் எதுவும் கிடையாது என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். இராணுவத்திரை பொது நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது எனவும், தேர்தலில் படையினர் தலையீடு செய்யக் கூடு மெனவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுவருகின்றன.**

எனினும் தேர்தல் கடமைகளில் படையினரை ஈடுபடுத்தும் எவ்விதத் திட்டமும் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நேரடியாக பொது நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள். குறிப்பாக தேர்தல் கடமைகளில் ஈடுபடப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், பிரிவினைவாத கொள்கைகள் கோட்பாடுகள் தொடர்வதாகத் தெரிவித்துள்ளார்.

சில அமைப்புக்களும் தரப்பினரும் இரகசியமான முறையில் பிரிவினைவாத கொள்கைகள், கோட்பாடுகளை முன்னெடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறானபின்னணியில், வடக்கில் சமாதானத்தையும், ஸ்திரத்தன்மையையும் நிலைநாட்ட இராணுவத்தின் ஒத்துழைப்பு அவசியப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் கோரிக்கை விடுத்தால் மட்டுமே தேர்தல் கட மைகளின் போது ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் சுதந்திரமான முறையில் தங்களது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தெரிவுக்குழு மூலம் நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு முடிவடைந்த பின்னர் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்படவுள்ளதாக அரச உயர்மட்டத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபைகளுக்கு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மறு பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி,தமிழ்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய முக்கிய எதிர்க்கட்சிகள் பிரதிநிதிகளை நியமிக்காத காரணத்தால் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் அரச கட்சிகளின் பிரதிநிதிகள் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்குவதற்கு தன்னிச்சையாக முடிவு எடுக்கக் கூடியதாக விருக்கும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எடுக்கும் முடிவுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாகவும் அவ்வட்டரங்கள் தெரிவித்தன. (அ-2)

# மாகாண சபை தேர்தல்களில் மோப்ப நாய்கள் கடமையில்



(கொழும்பு)

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களின் போது பாதுகாப்பு கடமைகளில் மோப்ப நாய்களையும் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென 35 நாய்களை அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கண்டி பொலிஸ் மோப்ப நாய் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சிசிர வீரகோன் தெரிவித்துள்ளார்.

இந்நாய்கள் வெடி பொருட்கள் மற்றும் குண்டுகளை கண்டுபிடிக்கும் பயிற்சியளிக்கப்பட்டவையாகு மெனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# பல்கலை.முகாமைத்துவ பீடத்திற்கு எதிராக கொழும்பில் வழக்கு தாக்கல்

(கொழும்பு)

டெங்கு தொற்று நுளம்புகள் உற்பத்தியாகும் விதத்தில் சூழலை மாசுபட்ட வகையில் வைத்திருந்த கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த தகவலை கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோய் தொற்று காரணமாக, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவியான எஸ்.பீ.நிசங்சலா சமரசிங்ஹ உயிரிழந்தார்.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட மற்[illegible] அதனை அண்மித்த பகுதிகள[illegible] டெங்கு நோய் தொற்று எற்ப[illegible] கூடிய வகையில் சூழல் காணப்பட்டதாக அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், கொழும்பு பல்கலைக்கழகத்தில் டெங்கு தொற்[illegible] பரவக்கூடிய வகையிலான இ[illegible] களை சுத்தப்படுத்துமா[illegible] மநகர சபையினா[illegible] கழக நிர்வாகத்திற்கு [illegible] டிருந்தது.

இதனையடுத்து, மேற்கொள்ள[illegible] பட்ட ஆய்வுகளின் போதே இந்த வி[illegible]யம் கண்டறியப்பட்டுள்ளது. (அ-2)

# சித்திரவதைக்குள்ளான பணிப்பெண் வைத்தியசாலையில்

(நீர்கொழும்பு)

சவுதிக்கு வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்ற யுவதியொருவர் வீட்டு உரிமையாளரினால் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சவுதிஅரேபியாவில் வீட்டு உரிமையாளரினால் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட 42 வயதான பெண்ணொருவர், அங்குள்ள இலங்கைத் தூதரகத்திற்கும் தெரியாமல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய குறித்த பெண்ணை, விமான நிலையத்தில் உள்ள இல[illegible]ங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கூந்தல், சவுதியில் வேலை செய்த வீட்டிலுள்ள குழந்தை ஒன்றின் காதணியில் சிக்கியதால், வீட்டு உரிமையாளர் அந்த பெண்ணை கடுமையாக தாக்கியதுடன், அவரை விமானநிலையத்திற்கு அழைத்து வந்து இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விசாரணைகளை நடத்தி வருகிறது. (அ-2)

# மலைப்பாம்பை வளர்த்து வந்த பெண்ணுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மலைப்பாம்பு ஒன்றை வளர்த்து வந்த பெண் ஒருவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் எச்சரித்து விடுதலை செய்துள்ளது.

நொச்சிமுனை கிராமத்தில் கடந்த 12 வருடங்களாக மலைப்பாம்பு ஒன்றை வளர்த்து வந்த பெண் ஒருவரை கடந்த புதன்கிழமை மாலை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் வளர்த்து வந்த மலைப் பாம்பு மற்றும் ஐந்து ஆமைகளை பொலிஸார் கைப்பற்றியதுடன் அப் பெண்ணையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரான அப்பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரணை செய்த மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்ற நீதிபதி என்.எம். அப்துல்லா குறித்த பாம்பை வளர்த்த அப்பெண்ணை எச்சரித்து விடுதலை செய்ததுடன் பாம்பு மற்றும் ஆமைகளை வன விலங்கு பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மட்டக்களப்பு நீதி மன்றத்தை பெரும் பரபரப்புக்குள்ளாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட தங்கப்பதக்க கூட்டமைப்பு நிறுவன கணக்காளரும் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை தலைவருமான திருமதி சாந்தகௌரி கனகசபை மாணவி ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லி மலை



## ஆன்மீகம் 67

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மனிதனின் மனப்பாங்கில் நாங்கள் எல்லோருமே திளைத்தோம். துன்பத்தின் இறுதியில் இன்பம் என்பது போல கோயிலருகோ யாரோ ஒரு புண்ணியவான் கட்டிய ஒரு பெரிய கொட்டகை தென்பட்டது. நிம்மதியுடன் எல்லோரும் உள்ளே சென்றோம். உள்ளே சென்ற எங்களுக்கு ஒரு அதிர்ச்சி. எங்களுக்கு முன் ஒரு பைரவர் அங்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்த ... எங்களில் சிலர் சீ போ என்றெல்லாம் கூறி விரட்ட முயன்றார்கள். இதைக் கண்ட சித்தர்பெருமான் சிலித்தெழுந்தவராய் ஐயா ஐயா பைரவரை ஒன்றும் சொல்லாதீர்கள். அவர் வேறு யாருமில்லை. இதுபோன்ற சமயங்களில் என் வழி காட்டியாக எனக்கு காவலாகவரும் என் அருமை ஆசான் தான் இவர் என்று கூற எல்லோரும் அசந்துபோய் நின்றோம். அதன்பின் பைரவருக்கு அங்கு உபசரிப்பே தனி. ஆளாளுக்கு போட்டி போட்டு மாறி உபசரித்தார்கள். இந்த இருண்ட நேரத்தில் அதுவும் மலை உச்சியில் துஷ்ட மிருகங்கள் வாழும் காட்டுப்பகுதியில் தனியாக ஒருநாய்! அதுவும் நாட்டு நாயாக இருந்தாலும் அது அழகாக இருந்தது. வந்ததும் விந்தையாகத் தோன்றியது. ஆசான் குறிப்பிட்ட ஆசான் எந்த சித்தரோ நான் பைரவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சித்தர்பெருமான் எந்த மலைக்குச் சொன்றாலும் இந்த பைரவர் மாதிரி ஒரு நாய் எங்கிருந்தோ வந்து எங்களுடன் சேர்ந்து கொள்ளும். நீண்ட காலம் பழகியதுபோல சித்தரிடம்



அன்புடன் பழகும். அவர் நண்பரைச் சந்தித்ததுபோல் வாங்க பைரவரே நல்லா இருக்கீங்களா? என்று குசலம் விசாரிப்பார். சித்தருக்கு முன் வழி காட்டுவதைப்போல செல்லும் அவ்வப்போது நாங்கள் வருகிறோமா? என்பதுபோல திரும்பிப் பார்க்கும்! அந்த மலையைவிட்டு இறங்கும் வரை அந்த பைரவர் சித்தருடன் அவர் அருகிலேயே இருப்பார். பக்கத்தில் படுத்து உறங்குவார். மலையை விட்டு இறங்கிய பிறகு அவர் எங்களை விட்டு எப்படி விலகிச் செல்வார் என்பது எங்கள் யாருக்குமே தெரியாத ஒரு அற்புதமான நிகழ்ச்சி என்றால் அது மிகையாகாது. இவரைப் போலவே ஒரு கருநாகமும் எங்களுக்கு வழிகாட்டியது. என்னால் இறக்கும் வரை மறக்க முடியாத நிகழ்ச்சி. அன்று இரவு எல்லோரும் உறங்குவதற்கு ஆயத்தமாயினர். எங்களுடன் போட்டியிடுவதைப்போல அந்த பைரவரும் படுக்க முயற்சி மேற்கொண்டார். வந்திருந்தோர் எவரும் பைரவருடன் படுக்க விரும்பவில்லை. சித்தருக்கு தெரியாத வகையில் அதை தங்களை விட்டுத் துரத்தினார்கள். இதனால் பைரவர் இடம் கிடைக்காமல் சித்தர் காலடியில் சென்று அமர்ந்தார். சித்தர் பெருமானும் படுத்துக்கொண்டார். எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். ஆனால், பொதுவாக சொல்வதுபோல் பைரவர் இன்று யார் பக்கத்தில் உறங்குகிறாரோ அவர்களே பாக்கியம் செய்தவர் என்றது சித்தரின் தெய்வீகக் குரல். இதைக் கேட்ட பின் அங்கு படுத்திருந்தவர்கள் எல்லோருக்குமே தாமே பாக்கிவானாகனும் என்ற பேரவா பிறந்தது. வந்து உறங்க வேண்டுமே என்று இறைவனை துதிக்கத் துவங்கினர். மிகுந்த களைப்பின் காரணமாக படுத்தவுடன் எல்லோரும் நித்திரா தேவியின் அரவணைப்பில் நம்மை மறந்தோம்.

(தொடரும்)



# ஒரு துப்பாக்கி, ஒரு மோதிரம்

# A GUN & A RING

உலகின் மிக முக்கியமான திரைப்பட விழாக்களில் ஒன்றான *ஷங்காய்* சர்வதேச திரைப்பட விழாவில் (shanhai International Film Festival) விருதுக்கு போட்டியிடும் படங்களில் ஒன்றாக A GUN & A RING என்கின்ற ஈழத்தமிழரின் திரைப்படமும் தெரிவாகியிருந்தது. ஈழத்தமிழர் விஷ்ணு முரளியின் தயாரிப்பில் லெனின் எம்.சிவம் இயக்கத்தில் TTN *படலைக்குப் படலை* புகழ் மன்மதன் என்கின்ற பாஸ்கர் மற்றும் பலரின் நடிப்பில் இப்படம் உருவாகியுள்ளது. *ஷங்காய்* திரைப்பட விழாவில் சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்றுத் திரும்பியிருந்த பாஸ்கருடன் தமிழ் ஊடகம் ஒன்றுடனான செவ்வி...

## ஈழத் தமிழர் அவலத்தை பதிவு செய்த, ஷங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் விருது பெற்ற தமிழ்த் திரைப்படம்

இன்று உலகில் உள்ள தமிழர்கள் பெருமை கொள்ள வேண்டிய ஒரு விடயம் நடந்துள்ளது. சீன நாட்டில் *ஷங்காய்* திரைப்படவிழாவில் தமிழர்களின் திரைப்படமான A GUN & A RING திரைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளது பற்றி

முதல் முதலாக தமிழ் மொழியில் மற்றும் உல்கத் தமிழர்களின் திரைப்படங்களில் இந்த A GUN & A RING திரைப்படம் ஷங்காய் திரைப்பட விழாவில் விருத்துக்குத் தெரிவாகியுள்ளது. 1655 திரைப்படங்களில் 12 படங்கள் தெரிவாகின. அவற்றில் இந்த A GUN & A RING திரைப்படமும் அடங்கும்

உலக வரலாற்றிலேயே முதன் முதலாக ஷங்காய் திரைப்படவிழாவில் தமிழர்களுக்கு



செங்கம்பள வரவேற்பு

தனிப்பட்ட முறையில் எனக்கும்ஓர் ஆசையும்கொள்கையும் இருந்தது. இப்படி ஒரு விழாவில் நான் கலந்து கொள்ளவேண்டும். செங்கம்பளத்தில் நடக்க வேண்டும் என்று. இது எங்கள் ஈழத் தமிழ்க் கலைஞர்கள் அனைவருக்கும் உண்டு. அதேநேரம் இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் லெனின் எம்.சிவம் அவர்கள் எமது மக்களுக்காக நாங்கள் இப்படிச் செய்யவேண்டும் என்ற கொள்கையாகவே இதை வைத்திருக்கிறார். அதை அவர் இன்று சாதித்துவிட்டார் ஆரம்பத்தில் அந்த செங்கம்பளவரவேற்பில்கலந்துகொள்ளும்போது நான் திகைத்து விட்டேன். எதையும் அறியாமலே நான் அந்த செங்கம்பளத்தில் நடந்து சென்றேன். அவ்வாறே இயக்குநர் உட்பட அனைவருக்குமே ஆச்சரியமாக இருந்தது.

பின்பு விருது அறிவிக்கும் அந்த நாள். அதாவது ஷங்காய் திரைப்படவிழாவின் இறுதி நாள் அன்று அந்த நிகழ்வை A GUN & A RING திரைப்பட குழுவினர் ஆகிய நாங்களே ஆரம்பித்துவைக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அந்த செங்கம்பள வரவேற்பைக் கூட நாங்களே ஆரம்பித்துவைத்தோம். அப்போது கூட நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கு முன்னால் ஒன்று இரண்டு குழுக்கள் சென்றதாக நினைத்தே நாங்கள் சென்றோம். அங்கு சென்றபோதுதான் தெரிந்தது, ஷங்காய் மாநில அமைச்சரும் ஷங்காய் திரைப்பட விழாக்குழுவின் தலைவர், செயலாளர் எங்களைக் கை குலுக்கி வரவேற்று எங்களுக்கு மதிப்பளித்தார்கள். அதற்குப் பின்னர்தான் தெரியும் நாங்கள முதலாவதாகச் சென்று விழாவை ஆரம்பித்து வைத்தமை. இந்த விடயத்தை இப்பொழுது நினைத்தால்கூட நம்பமுடியாமல் உள்ளது.

**கலைப்படத்தில் கிடைத்துள்ள உத்வேகம்**

இதன்பின்னர் எமது திரைத்துறை சார்ந்த நண்பர்களுக்கு நான் கூறிய விடயம் அதாவது, நாங்கள் எல்லோரும் இதனை ஒரு கடமையாகத் தான் செய்து கொண்டு வருகின்றோம். திரைப்படங்களை வளர்க்க வேண்டும். எமது மக்களின் கதைகளைப் பதிவாக்க வேண்டும் என்று. இருப்பினும் இன்னும் இன்னும் வலுவாக வேலை செய்து எமது திரைப்படங்களை லெனின் கொண்டு செல்வது போல் திரைப்பட விழாக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு சென்றால் எமது கதைகளும் அவர்களைச் சென்றடையும். அதேவேளை வேறு திரைப்படத்துறையைச் சார்ந்தவர்களும் எம்மைத் தேடிவருவார்கள். இன்று வரைக்கும் நாங்கள் தேடிச் சென்று எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. இவ்வாறு செய்தால் அவர்கள் எம்மைத்தேடி வருவார்கள் என்பதற்கு லெனின் முழு உதாரணம்.

**A GUN & A RING திரைப்படத்தில் நடிப்**




**புத் திறமை**

A GUN & A RING திரைப்படத்தைப் பொறுத்தளவில் அனைவரும் சிறப்பாக நடித்துள்ளார்கள். ஷங்காய் திரைப்படவிழாவில் நடுவர்களுக்குத் தலைமை தாங்கியவர் லண்டனைச்சேர்ந்த ரொம் குப்பர் என்பவர். அவர் இயக்குநரும் நடிகருமாவார். அவர் இப்போது உள்ள சினிமாத்துறையில் பிரபல்யமானவர். அவருடைய திரைப்படங்கள் ஒஸ்கார், கான் திரைப்பட விழாக்களில் விருதுகள் வென்றவர். அவர் என்னிடம் வந்து உனது நடிப்பு நன்றாக உள்ளது. நன்றாக அமைந்துள்ளது. என்னுடைய தனிப்பட்ட முறையில் உனக்கு சிறந்த பாராட்டுக்கள் என்று கூறி வாழ்த்தினார். விழாவின் இறுதிநாள் நிறைவின்போது என்னை சந்தித்தபோதே அவர் என்னைப் பாராட்டினார். அது எனக்கு மகிழ்ச்சியாகவிருந்தது.


**தமிழ் மக்களுக்கு பெருமை சேர்த்த திரைப்படமான A GUN & A RING திரைப் படத்தின் கதைபற்றி**

அதில் ஆறு கதைகள் பின்னப்பட்டுள்ளன. அதாவது ஆறு விதமான கதைகள். அந்த ஆறுவிதமான கதைகளும் எமது புலம்பெயர்ந்த மக்களின் விடயங்கள் மற்றும் நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான விடயங்களாக உள்ளன. இப்படத்தில் முற்று முழுதாக ஈழம் சம்பந்தமான விடயங்கள்தான் தலைதூக்கி நிற்கின்றன. இன்று தனிப்பட்ட முறையில் அதை நான் நினைத்துப் பெருமைப்படுவது என்னவென்றால் இத்திரைப் படம் எத்தனை ஆயிரம் மக்களுக்கு மத்தியில் திரையிடப்பட்டது. எத்தனை ஆயிரம் படங்களோடு சேர்ந்து போட்டியிட்டது. மற்றும் உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற இயக்குநர்கள், நடிகர்கள் எல்லாம் பார்த்து இத்திரைப்படத்தைப் பாராட்டியதொரு உண்மை.

தொடரும்

இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் அரங்கம்

522

## பறக்கும் தேவதை



தனது பன்னிரெண்டாவது வயதிலேயே தாயை இழந்த ராமு, தாயன்பிற்காக மிகவும் ஏங்கினான். "எனக்கு அம்மா வேண்டும்" என்று அடிக்கடி தந்தையிடம் புலம்பினான். தாய் இறந்து ஒராண்டு சென்றும், அவனால் தன் தாயை மறக்க முடியவில்லை. எப்போதும் அவளை நினைத்து உருகினான். தூங்கும்போது கனவினில் கூட அவன் தன் தாயைக் கண்டு தூக்கத்தில் அரற்றுவது உண்டு. அவருடைய உறவினர்கள் அவ்ரை மறுமணம் செய்துகொள்ளும்படி அடிக்கடி வற்புறுத்தி வந்தனர்.

இடையில் கடுமையான

**அம்புலிமாமா கதைகள்**

வறட்சி ஏற்பட்டதால் பெரிதும் பாதிக்கப்பட்ட ராமுவின் தந்தை ஜெகன் தன் நிலங்களை விற்று விட்டார். அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு, அருகிலிருந்த நகரத்தில் ஒரு கடை திறந்து வியாபாரம் செய்யத் துவங்கினார். நகரத்தில் வீட்டுவாடகை அதிகமாக இருந்ததால், அவர் கிராமத்திலேயே இருந்து கொண்டு தினமும் நகரத்திற்குச் சென்று வந்தார்.

அதிகாலையில் கிளம்பும் அவர், நகரத்தில் கடை வியாபாரத்தைக் கவனித்துவிட்டு இரவு வெகுநேரம் கழித்தே வீடு திரும்புவார். இதனால் தன் மகனை அவரால் சரியாகக் கவனிக்கவே முடியவில்லை. இறுதியில் தனக்கு விருப்பமில்லா விட்டாலும், ராமுவை கவனித்துக் கொள்வதற்காக மறுமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து, ஈஸ்வரி என்ற பெண்ணை விவாகம் செய்து கொண்டார்.

ஆனால், அவளோ வீட்டு வேலைகள் அனைத்தையும் ராமுவின் தலையில் சுமத்தினாள். அவனுக்கு ஒழுங்காக உணவு அளிப்பதும் இல்லை. ஒருநாள் ராமு பள்ளிக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்த போது, ஈஸ்வரி திடீரென்று அவனுடைய புத்தகப்பையை பறித்து வீசி எறிந்தாள். "நீ படித்து என்ன கிழிக்கப்போகிறாய்? நீ படித்தது போதும்! இன்று முதல், காட்டிற்குப் போய் விறகு வெட்டிக் கொண்டு வா" என்று இரக்கமின்றிக் கூறி அவன் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

தனது படிப்புத் தடைப் பட்டதில் ராமுவிற்கு பயங்கர அதிர்ச்சியை உண்டாக்கியது. "சித்தி! விறகு வேண்டுமானால் நான் அதை மாலை நேரம் சென்று எடுத்து வருகிறேன்" என்று கெஞ்சினான். ஆனால், அவள் அவனை மிரட்டி, காட்டிற்கு விரட்டி விட்டாள்.

காட்டிற்குச் சென்ற ராமு அங்கிருந்த சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வீடு திரும்பினான். அவன் கொண்டு வந்தவற்றைக் கண்ட ஈஸ்வரி, "நாள் முழுவதும் வெட்டியாகக் கழித்துவிட்டு, இத்தனை சிறிதளவு எடுத்து வந்திருக்கிறாயே! இது எப்படிப் போதும்?" என்று விரட்டினாள். "சரி,சரி! எல்லா வீட்டுவேலைகளும் அப்படியே இருக்கின்றன. அதை எல்லாம் செய்து முடி!" என்று உத்தரவிட்டாள். ஏற்கனவே காட்டில் நாள் முழுதும் அலைந்து சிரமப்பட்ட ராமு, வீட்டு வேலைகளை செய்து முடிக்க இரவு வெகுநேரமாகிவிட்டது. உடல் முழுதும் பயங்கரமாக வலித்தது. தான் முதுகெலும்பு வளைய ராமுவின் தந்தை இப்போதெல்லாம் நகரத்திலேயே இருந்து கொண்டு, ஞாயிற்றுக்கிழமை மட்டுமே வீட்டிற்கு வந்தார். தன் மகன் படும் துன்பங்களை அவர் அறியவாய்ப்பில்லாமல் போய்விட்டது. தவிர, அவரிடம் எதுவும் புகார் செய்யக்கூடாது என்று ஈஸ்வரி கடுமையான உத்தரவு இட்டு இருந்தாள். ஒருநாள் ராமு காட்டில் சுள்ளி பொறுக்



கிக் கொண்டிருக்கையில், புதர்களுக்கிடையே பளபளவென மின்னிக்கொண்டிருந்த ஒரு தங்கநிற இறகு தென்பட்டது. ஆச்சரியத்துடன் அதை ராமு தன் கையில் எடுத்ததும், திடீரென மின்னல் போல் ஒளி வீசிக் கொண்டு அவன் முன் ஒரு தேவதை தோன்றினாள்.

அவளுக்கு தங்க நிறத்தில் இரு பெரிய சிறகுகள் இருந்தன. அவள் ராமுவைப் பார்த்து, "சிறு வயதில் இத்தனை சிரமப்பட்டு காட்டில் தனியாக விறகு சுமக்கும் உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது" என்றாள். அவளை பயபக்தியுடன் விழுந்து வணங்கிய ராமு, "அன்னையே! நான் தாயற்றவன். என் சித்தியின் கட்டளையின் பேரில் நான் இத்தனை சிரமப்பட வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், சித்தி என் படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டது தான் எனக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. நீங்கள் தான் என்க்கு அருள் செய்ய வேண்டும்!" என்றான். "கவலைப்படாதே! உன் ஆசையை நான் நிறைவேற்றுகிறேன்.

உன் கையில் வைத்துள்ள இறகினால், என் சிறகுகளை மூன்று முறை தொட்டால், சிறகுகளிலிருந்து பொற்காசுகள் விழும். அதை வைத்துக் கொண்டு நீ வசதியுடன் வாழ்வாய்! உன் படிப்பையும் தொடர்வாய்!" என்றாள். "இல்லை, தாயே! உழைக்காமல் கிடைக்கும் பணம் எனக்கு வேண்டாம்" என்று ராமு மறுத்ததும், "பராவாயில்லை! நான் பறக்கும் தேவதை! என்னுடன் பேசிக்கொண்டேயிருந்தால் உனக்குக் களைப்பு வராது. அந்த இறகை நீ பத்திரமாக வைத்துக்கொள்! அதைக்



கையில் எடுத்து என்னை நினைத்தால் நான் உன் முன் தோன்றுவேன்! இப்போது உன்னை உன் வீடுவரை கொண்டு செல்கிறேன்! என்று சொல்லி விட்டு, அவனைத் தன் கரங்களில் ஏந்தி பறந்து சென்று வீட்டில் விட்டாள்.

வீட்டிற்குச் சென்ற ராமு, தான் கொண்டு வந்த இறகை பத்திரமாக துணிகளுக்கு இடையே ஒளித்து வைத்தான். மறுநாள் காட்டிற்குச் செல்லும்போது, அதைத் தன்னுடன் எடுத்துச் சென்ற ராமு, காட்டை அடைந்ததும் அதைக் கையில் பிடித்துக் கொண்டு தேவதையை நினைத்தவுடன், அவள் அவன் முன் தோன்றினாள். நாள் முழுதும் அவனுடன் சிரித்து, சிரித்து அவள் பேசியதில், அவனுக்கு நேரம் சென்றதே தெரியவில்லை. மாலையில் அவனைத் தன் கைகளில் சுமந்து பறந்து வந்து வீடு வரை கொண்டுவந்து விட்டாள்.

இதுபோல் தினசரி நடக்கத் தொடங்கியது. ஒருநாள் ராமுகாட்டிற்குச் செல்லும் போது, தன்னுடன் தேவதையின் இறகை எடுத்துச் செல்ல மறந்துவிட்டான்.

அவனுடைய பொருட்களைக் குடைந்து பார்த்த ஈஸ்வரிக்குத் தற்செயலாக அவன் துணிகளுக்குள் ஒளித்து வைத்திருந்த இறகு தென்பட்டது.

தங்கத்தில் வார்த்தெடுத்தது போல் ஒளிவீசி மின்னிய அதைக் கண்டதும் அதை அவள் எடுத்துக் கொண்டு, அவசர அவசரமாக ஒரு நகைக் கடைக்குச் சென்றாள்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமேல் மாகாண சபைத் தேர்தலில் சந்திரிக்கா

எதிர்வரும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை களம் இறக்கும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகாவே அதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து தான் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அண்மையில் அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதன் பின் புலத்தில் தற்போது வடமேல் மாகாண சபைத் தேர்தலில் பொன்சேகா கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக சந்திரிகா போட்டியிடவுள்ளதாக குறித்த இணையத்தள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கு இருக்கும் ஆதரவுத் தளம் மற்றும் வடமேல் மாகாணத்தில் வசிக்கும் அதிகளவான இராணுவத்தினரின் ஆதரவு என்பவற்றைக் கொண்டு மாகாண சபை நிர்வாகத்தை கைப்பற்றும் வியூகத்தில் பொன்சேகா இறங்கியுள்ளதாக அந்தச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் சந்திரிகாவிடம் இருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிறுபான்மை கட்சிகள் ரணிலுடன் சந்திப்பு

## சிங்கள ஊடகம்

சிறுபான்மை கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசியமான முறையில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய சிறுபான்மை கட்சிகளே இவ்வாறு ரணிலுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

பெரும்பாலும் இந்த சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# அபிவிருத்தி தொடர்பான ஊடகக்கருத்தரங்கு

அரசாங்க தகவல் திணைக்களம் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்தும் மாவட்ட அபிவிருத்தியில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு தொடர்பான ஊடகக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தலைமையில் நடைபெறும் இவ் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர முதல்வர்யோகேஸ்வரிபற்குணராசாஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முக்கிய உரை நிகழ்த்தவிருப்பதுடன் களனிப் பல்கலைக்கழக வெகுஜன ஊடககற்கைப் பிரிவின் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல,தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். தில்லைநாதன், சட்டத்தரணியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.பீ. வைஸ் ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

இவ் ஊடக கருத்தரங்கில் கலந்து கொள்வோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர் என பிரதித்தகவல் பணிப்பாளர் ஹில்மி முஹம்மத் அறிவித்துள்ளார். (அ)

# ஆடி வேல் விழா மூன்று நாட்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிமேல் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் பருத்தித்துறை வீதிவழியாக வீரமாகாளி அம்மன் ஆலயத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்டு யாழ். நகர் வீதியூடாக மாலை 6.30 மணிக்கு வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலை சென்றடையவுள்ளது.

தொடர்ந்து 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வண்ணை சிவன் கோவிலிருந்து புறப்படும் ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து பிற்பகல் 4 மணிக்கு புறப்பட்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை அடையவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் ஊர்வலம் திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை அடைந்து பிற்பகல் 4.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தை அடையவுள்ளது. (அ-5)

# பொதுநலவாய மாநாட்டை மலேசியா புறக்கணிக்க வேண்டும்

## அந்நாட்டு நாடாளுமன்றம் கோரிக்கை

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை மலேசிய பிரதமர் பகிஷ்கரிக்க வேண்டும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.குலசேகரன் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே மலேசியாவில் இடம்பெற்ற இஸ்லாமிய மாநாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அது பலத்த எதிர்ப்புக்களால் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் இலங்கையில் சிறுபான்மை தமிழர்களின் முஸ்லிம்களின் வணக்கத்தலங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை தடுக்க இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மலேசிய பிரதமர் பொதுநலவாய நாடுகளின் கொழும்பு மாநாட்டில்பங்கேற்பதைதவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று குலசேகரன் மலேசிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின்போது கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)




* 1499-புனித ரோமப் பேரரசின் முதலாம் மாக்சிமிலியனின் படைகளை சுவிஸ் படைகள் டொனார்க் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் வென்றன.
* 1587 - வட கரோலினாவின் ரோனோக் தீவில் ஆங்கிலேயர்களின் இரண்டாவது தொகுதி குடியேற்றவாதிகள் வந்திறங்கினர்.
* 1823 -யாழ்ப்பாணத்தில் டாக்டர் டானியல் வோரன் புவர் தலைமையில் அமெரிக்க மிஷனின் பட்டிக்கோட்டா செமினறி திறக்கப்பட்டது.
* 1933 - வைலி போஸ்ட் 15,596 மைல்களை 7 நாட்கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.
* 1944 - போலந்தின் தேசிய விடுதலைக்கான குழு நாட்டில் சீர்திருத்தங்களையும், நாசிகளுக்கெதிரான போரை முன்னெடுத்துச் செல்லவும், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கும் திட்டத்தையும் அறிவித்தது. போலந்தில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமானது.
* 1962 -நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக்கடங்காமல் சென்றதால் அது அழிக்கப்பட்டது.
* 1999 - விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசாப்டினால் வெளியிடப்பட்டது.
* 2003 - ஈராக்கில் சதாம் உசேனின் புதல்வர்கள் குவாசி, உதய் ஆகிய இருவரும் அமெரிக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதாமின் 14 வயதுப் பேரனும் கொல்லப்பட்டான்.
* 2009 - சூரிய கிரகணம், ஜூலை 22: 21ம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், பங்களாதேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.


**பிறப்பு**

* 1983 - நுவான் குலசேகர, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

**இறப்பு**

* 1832 - இரண்டாம் நெப்போலியன், பிரான்சின் பேரரசன் (பி. 1811)

### சூரிய கிரகணம்



சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலவு செல்லும் போது பூமியிலிருந்து அதனைப் பார்க்கையில் சூரியனும் நிலவும் வானில் நேர் கோட்டில் (Conjunction) இருந்தால் சூரிய கிரகணம் ஏற்படும்.

இது ஒரு அமாவாசை நாளன்றுதான் நிகழும் இதனால் சூரியன் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ மறைக்கப்படும். முதலாவதாக ஏற்படும் கிரகணம் முழு சூரிய கிரகணம் என்றும் பின்னர் ஏற்படுவது பகுதி சூரிய கிரகணம் என்றும் அழைக்கப்படுகின்றது.

புவியைப் பொறுத்தவரை ஓர் ஆண்டில் இரண்டிலிருந்து ஐந்து வரையிலான சூரிய கிரகணங்கள் ஏற்படக் கூடும். இதில் இரண்டு கிரகணங்கள் வரை முழு சூரிய கிரகணங்களாக அமையலாம். சில ஆண்டுகள் முழு கிரகணம் ஒன்றுகூட ஏற்படாமலும் போகலாம்.

பூமியை ஒருமுறை சுற்றி வர நிலவுக்கு 29 1/2 நாட்கள் தேவைப்படுகின்றது. இவ்வாறு சுற்றி வருகையில் பல்வேறு கட்டங்களை புவியிலுள்ளோருக்கு அளிக்கிறது. அவையாவன.

புது நிலவு (அமாவாசை), புது பிறை (நான்காம் நாள்), முதல் கால்பிறை (ஏழாம் நாள்), வளர் முகிழ்மதி (பத்தாம் நாள்), முழு நிலவு (பதின்னான்காம் நாள்), தேய் முகிழ்மதி (பதினெட்டாம் நாள்), இறுதி கால்பிறை (இருபத்து இரண்டாம் நாள்), பழைய பிறை (இருபத்து ஆறாம் நாள்), மீண்டும் புது நிலவு (இருபத்து ஒன்பதாம் நாள்) ஆகும். புது நிலவின் போது நிலவைக் காண இயலாது. ஏனெனில் பூமியை நோக்கியுள்ள நிலவுப் பகுதியின் மீது சூரியவொளி சிறிதும் படுவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி: மனிதமேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா...?

பேராசிரியர்என். சண்முகரத்தினம்



அபிவிருத்தி சார்ந்து அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலாவது, உள்நாட்டுப் போருக்கு அடிப்படைக் காரணமாக இருந்த தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியத்தை ஒதுக்கிவிட்டு அபிவிருத்தியை முன்வைப்பதும், அதையே அரசியல் தீர்வுக்கு பிரதியீடாக காட்ட முயற்சிப்பதுமாகும்.

அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வுக்கும் இடையே நெருக்கமான உறவுண்டு. ஆனால், முன்னையது பின்னையதின் பிரதியீடாக இருக்க முடியாது. அரசியல் தீர்வின் தவிர்க்க முடியாத அவசியத்தினையும் அவசரத்தினையும் ஏற்க மறுக்கும் ஒரு அரசாங்கத்தினால், மக்களின் தொடர்ச்சியான மனித மேம்பாட்டிற்கு உதவும், ஒரு அபிவிருத்திப் போக்கினை ஏற்படுத்த முடியுமா எனும் கேள்வி நியாயமானதே.

இது, இரண்டாவது விடயத்திற்கு இட்டுச் செல்கிறது. அரசாங்கமும் அதன் கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கும் அறிவாளர்களும் பிரச்சாரகர்களும் மிகைப்படக் கூறும் அபிவிருத்தி என்பதன் உள்ளடக்கம் தான் என்ன?

வடக்கு- கிழக்கில் இடம் பெறும் அபிவிருத்தி, மக்கள் விரோதப் போக்குகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் அது, பெரும்பாலானோரின் நீடித்த மனித மேம்பாட்டிற்கு உதவவல்லதா என்ற கேள்வி எழுகிறது. இப்படி சொல்வது, இலங்கையின் மற்றய பகுதிகளில் பெரும்பாலான மக்களின் நலன் சார்ந்த அபிவிருத்தி ஏற்படுகிறது என்பதாகாது. வடக்கு- கிழக்கில் அமுலில் இருக்கும் அபிவிருத்திக் கொள்ளையை முழு நாட்டிலிருந்தும் முற்றிலும் தனிமைப்பட்ட ஒன்றெனக் கொள்ள முடியாது. அதேவேளை, பல காரணங்களால் வடக்கு- கிழக்கு அபிவிருத்தக்குச் சில குறிப்பான சவால்களும் தன்மைகளும் உண்டு. இவை முழு நாட்டையும் பாதிக்கவல்லன என்பதும் உண்மை.

1977லிருந்து இலங்கையில் நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கை நடைமுறையிலிருக்கிறது. 1970 களிலிருந்து பல நாடுகள் மீது திணிக்கப்பட்ட இந்தக் கொள்கை மக்கள் நலன் சார்ந்ததல்ல எனப் பல ஆய்வுகள் தெளிவாக காட்டியுள்ளன. அதேவேளை, இலங்கையில் இந்தக் கொள்கையின் நடைமுறையும் நாட்டின் பொருளாதாரமும் கடந்த பல ஆண்டுகளாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ஒரு குடும்பத்தின் செல்வாக்குக்கும் ஆதிக்கத்துக்கும் உள்ளாகியிருப்பதும் உலகறிந்ததே.

ஆளும் கூட்டினர், நவதாராளவாத விதிகளை தமது நலன்களுக்கேற்ப மாற்றிக் கொள்வதையும் மீறுவதையும் காண்கிறொம். இதன் விளைவான அபிவிருத்திப் போக்கு, தீர்வு காணப்படாத தேசிய இனப்பிரச்சினையின் இராணுவ மயமாக்கல், பேரினத்துவ மேலாதிக்கம், அதிகாரவாதமயமாக்கல், பெருமளவிலான நாடளாவிய மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது. இந்தச் சிக்கலான பின்னிப்பிணைப்புடன் உள்நாட்டுப் போரினதும் உலகமயமாக்கலினதும் விளைவான, ***காசாதாரப்*** (Remittance Economy) பொருளாதாரத்தின் நல்ல, தீய தாக்கங்களும் இணைகின்றன.

அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை நிராகரிக்கப் பயன்படுத்தப்படும் இந்த அபிவிருத்தியின் அரசியல் பொருளாதாரத்தை ஆழப்பார்த்தல் அவசியம். இது வடக்கு- கிழக்கில் சில குறிப்பான அடக்குமுறைத் தன்மைகளைக் கொண்டிருக்கும். அதேவேளை, முழு இலங்கையையும் பாதிக்கும் ஒன்றாகும். பொருளாதாரக் கொள்கையின் நடைமுறை, ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்ட அதிகாரக்குழுவின் போக்கு, எதேச்சாதிகார இராணுவ மயமாக்கல், பேரினவாதக் கருத்தியலின் பயன்பாடு ஆகியன எப்படி அடக்குமுறைக்கு உதவும் வகையில் இணைக்கப்பட்டு அபிவிருத்தி, தேசிய இறைமை எனும் போர்வைகளால் நியாயப் படுத்தப் படுகின்றன என்பதைப் பார்த்தல் அவசியம். இவற்றைப் பார்ப்பதற்கு முன் அபிவிருத்திக்கும் மனித மேம்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு பற்றி ஒரு குறிப்பு பயன்தரும்.

**மனித மேம்பாடு பற்றி**

மனித மேம்பாடு என்கின்றபோது, ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதரின் ஆற்றல்களின் விருத்தியையே குறிக்கும். பொதுவாக மனிதரின் உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி, உழைப்பாற்றல், பாதுகாப்பு மற்றும் ஒருவர் பெறுமதிமிக்கதெனக் கருதும் வாழ்முறையைத் தேடும் சுதந்திரம் போன்றவை மனிதமேம்பாட்டின் வரைவிலக்கணத்தின் அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

வாழ்முறையைத் தேடும் சுதந்திரம் என்பது சிந்தனை பேச்சு எழுத்து சுதந்திரங்களையும் உள்ளடக்குகின்றது. இந்த வகையில் மனித மேம்பாட்டை நோக்குமிடத்து, அது மனித நன்னிலை தன்மைகளைக் குறிக்கிறது. அபிவிருத்தியை மனித சுதந்திரங்களின் விரிவடைதலுடன் இணைக்கும் சிந்தனைப்போக்கு ஒன்று உண்டு. இன்றைய காலத்தில் இந்த அணுகுமுறையைப் பிரபல்யப் படுத்தியவர் அமர்த்தியா சென் அவர்கள் ஆகும்.

அபிவிருத்தியை மனித ஆற்றலுடைமைகளின் வளர்ச்சியின் போக்காக பார்க்கலாம் என சென் கூறுகிறார். ஆற்றலுடமை மனிதர்களின் இருப்புக்களையும், செயற்பாடுகளையும், உள்ளடக்குகிறது. இது ஒருவர் பசி, பிணி, எழுத்தறியாமை போன்றவற்றிலிருந்து விடுபடும் அடிப்படை இருப்புக்களிலிருந்து அவர் தனக்குப் பெறுமதி வாய்ந்ததெனப் பகுத்தறிவு பூர்வமாகக் கருதும் இருப்புக்கள் செயற்பாடுகளை அனுபவிக்கும் ஆற்றல்களைச் சுதந்திரங்களைக் குறிக்கும், நீண்டகாலமாக இந்தக் கோட்பாட்டை பல ஆய்வுகளுக்கூடாக விளக்கிய சென் தனது முழுமையான கருத்துக்களை 1999ல் Development as freedom எனும் நூலில் தருகிறார். சென்னுடைய கருத்து, 18 ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய அறிவொளிக் காலத்தில் வெளிவந்த மனித விடுதலை பற்றிய சிந்தனையினால் ஆகர்ஷிக்கப்பட்டது. அவரது நிலைப்பாடு தாராளவாத தத்துவத்தில் வேரூன்றியுள்ளது. குறிப்பாக அடம் ஸ்மித்தின் தாராளவாதத்தில் என்று அவரே கூறியுள்ளார். இன்று அபிவிருத்தி கற்கைகள் துறையிலும் U.N.D.P இன் மனித அபிவிருத்தி அறிக்கைகளிலும் சென்னுடைய கோட்பாட்டின் செல்வாக்கைக் காணலாம். முதலாளித்துவ அமைப்புக்குள் ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்ப அபிவிருத்திப் போக்குகளை மதிப்பிடவும் விமர்சிக்கவும் சென்னுடைய ஆற்றலுடைமைக் கோட்பாட்டைப் பயன்படுத்தலாம். அதேவேளை, அவருடைய தாராளவாத நிலைப்பாடும் உரிமைகளுக்கான மக்கள் போராட்டங்களைப் பற்றி அவர் கணக்கிலெடுக்கத் தவறியதும் விமர்சிக்கப் படவேண்டும். அதேபோன்று, முதலாளித்துவம் பற்றிய அவரது விளக்கங்களும் சர்ச்சைகுரியவை.

இங்கு அழுத்திக் கூற வேண்டிய விடயம் என்னவெனில் மனித மேம்பாட்டையோ நன்னிலையையோ பிரதானமான நோக்கமாகக் கொண்டு இயங்கும் சமூக அமைப்பில் நாம் வாழவில்லை. முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் மனித உழைப்பாற்றலின் வளர்ச்சி இன்றியமையாதது. இந்த அமைப்பில் மனித மேம்பாடு என்பது மூலதனத்தின் பொருளாதார, சமூக, அரசியல் தேவைகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளது. ஆகவே, மனிதமேம்பாட்டை நாம் வாழும் சமூக அமைப்பின் தன்மைகளிலிருந்து பிரித்துப் புரிந்துகொள்ளவோ விளக்கவோ முடியாது. முதலாளித்துவத்திற்கு அடிப்படையான உலகளாவிய தன்மைகள் இருக்கும் அதேவேளை, அது நிறுவன ரீதியில் பல்வேறு அரசியல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு இராணுவ சர்வாதிகாரம் மற்றும் பாசிசம் போன்ற அடக்குமுறை மிகுந்த ஆட்சியமைப்புகளிலிருந்து பூர்சுவா சுதந்திரங்கள், மனித உரிமைகளைக் கொண்ட தாராளவாத மற்றும் சமூக ஜனநாயக ஆட்சி அமைப்புக்கள் வரை முதலாளித்துவத் தின் அரசியல் மாதிரிகளை நடைமுறையில் காணலாம். இத்தகைய அமைப்பு ரீதியான வேறுபாடுகளுக்கும் மனித மேம்பாட்டின் விருத்தியின் மட்டங்களுக்குமிடையே நெருக்கமான உறவு இருப்பதைக் காணலாம்.

உதாரணமாக உணவு, உறைவிடம், உடை போன்ற அடிப்பைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கும் ஒரு சமூகத்தில் மற்றய அடிப்படைச் சுதந்திரங்கள் மறுக்கப்படலாம். இந்தத் தடைகள் மனித மேம்பாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். பொதுவாக ஒரு நாட்டில் காணப்படும் ஜனநாயக சுதந்திரங்கள், சமூகப் பாதுகாப்பு போன்றவை மக்களின் போராட்டங்களின் விளைவுகள் என்பதை மறந்து விடலாகாது. இப்போராட்டங்கள் வர்க்க ரீதியாகவும் பரந்த வெகுஜன ரீதியாகவும் இடம் பெறுகின்றன. இவற்றில் தொழிலாளர் வர்க்க மற்றும் பெண்ணுரிமை, சூழல்பாதுகாப்பு இயக்கங்கள் முக்கிய பங்குகளை வகித்துள்ளதைக் காணலாம்.

மறுபுறம், ஒரு முதலாளித்துவ அமைப்பின் அரசியல் ரீதியான, சமூகரீதியான நியாயப்பாட்டிற்கு ஜனநாயக உரிமைகளும் சமூகப் பாதுகாப்பும் அவசியமாகின்றன. அடிப்படை உரிமைகளை மறுக்கும் அரசு, அடக்குமுறைக் கருவிகளிலேயே தங்கியிருக்கும். அத்தகைய அராங்கத்தில், மனிதமேம்பாட்டின் போக்கு கட்டுப்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் இறுக்கமான அறிவிப்பை மீறி மீண்டும் சென்றது அகதிகள் படகு

(கொழும்பு)

**இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் புகலிடக்கோரிக்கையாளர்கள் குறித்து அவுஸ்திரேலியா புதிய நடைமுறையை அறிவித்ததையடுத்து முதலாவது சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் படகொன்று கிறிஸ்மஸ்தீவை சென்றடைந்துள்ளதாக அவுஸ். உள்துறை அமைச்சர் ஜேசன் க்ளேயர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

81 அகதிகளையும் 2 மாலுமிகளையும் கொண்ட இந்தப் படகு நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. அதில் வந்தவர்கள் தற்போது கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் படகுகள்மூலம் அவுஸ்திரேலியா செல்கின்ற அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் அந்தநாட்டு பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அதில் விசா இல்லாமல் சட்டவிரோதமாக படகுகளில் வந்தவர்களுக்கு நாட்டில் இடமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதி படகுகளைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டத்தின் ஒரு கட்டமாகவே இந்த விளம்பரங்கள் பிரசு ரிக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் 18 ஆயிரம் வெளிநாட்டுப் பிரஜைகள் தங்கியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் 18 ஆயிரம் வெளிநாட்டு பிரஜைகள் இலங்கையில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய வகையில் இவர்கள் தங்கியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளை கைது செய்து நாடு கடத்த தேசிய புலனாய்வுப் பிரிவு தீர்மானித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் குறித்த தகவல்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருகின்றனர். வர்த்தகர்கள், அறுவடையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் நாட்டுக்குள் பிரவேசித்து தங்கியிருக்கின்றனர்.

வெளிநாட்டு உளவுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு நாட்டில் தங்கியிருக்கின்றனர். இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கின்றனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கின் அபிவிருத்திக்காக 16132 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

கடந்த மூன்று வருடகாலத்தில் வடக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் விவசாய கைத்தொழில் போக்குவரத்து குடிநீர் வசதிகளை அதிகரிப்பதற்கும் என 16,132 கோடி ரூபா செலவிடப்பட்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கூறியுள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதனுடன் இணைந்ததாக இந்த அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, விவசாயத்துறை அபிவிருத்திக்கு 910 கோடி ரூபாவும் கைத்தொழில் சுற்றுலா மற்றும் வர்த்தகத்துறை மேம்பாட்டுக்காக 135.4 கோடி ரூபாவும் போக்குவரத்துறைக்காக 9394.98 கோடி ரூபாவும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க 1565.98 கோடி ரூபாவும் குடிநீர் வசதிகளுக்கு 403 கோடி ரூபாவும் நிர்வாக பொது வசதிகளுக்காக 213.86 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் 3113.36 கோடியும் 2011 ஆம் ஆண்டில் 6500.51 கோடியும் 2012 ஆம் ஆண்டில் 6116.44 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டிலும் பல்வேறு துறைகளில் அபிவிருத்திக்காக அரசாங்கம் பல கோடி ரூபா செலவழித்து வருவதோடு சர்வதேச நிறுவனங்களும் அபிவிருத்திக்கு பங்களித்து வருகின்றன. (அ-2)

# இலங்கை அரசியல்வாதியொருவர் மாலைதீவுக்கு பணம் கொடுக்க முயற்சி

## ஜனாதிபதி கூறினாராம்

(கொழும்பு)

இலங்கை அரசியல்வாதியொருவர் மாலைதீவு ஜனாதிபதிக்கு 4 பில்லியன் ரூபா பணத்தை வழங்க முயற்சித்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக இவ்வாறு பணம் வழங்க முயற்சித்தார் என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.

அண்மையில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டமொன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவு அமைச்சர் ஒருவருடன் சென்ற குறித்த இலங்கை அரசியல்வாதி அந்நாட்டு ஜனாதிபதிக்கு 4 பில்லியன் ரூபா பணத்தை வழங்க முயற்சித்துள்ளார்.

எனினும் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வஹீட் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கதவைக் காண்பித்து வெளியேறிச் செல்லுமாறு மாலைதீவு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏன் எனக்கு பணம் வழங்குகின்றீர்கள், உங்களது நாட்டு ஜனாதிபதிக்கு பணம் வழங்குங்கள் என அவர் குறிப்பிட்டதாகவும் சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ-2)

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தொடர்பில் பிழையான பிரசாரம்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தொடர்பில் பிழையான பிரசாரம் செய்யப்படுவதாக கபே அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் தவறான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்துவது குறித்து அரசாங்கமோ தேர்தல் ஆணையாளரோ கூடுதல் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்த இன்னமும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. உடனடியாக அழைப்பு விடுக்காவிட்டால் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்த சந்தர்ப்பம் கிட்டாது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு கண்காணிப்பாளர்களுக்கும் இதுவரையில் அழைப்பு விடுக்கப்படவில்லை. இறுதி நேரத்தில் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதனால் எவ்வித பயனையும் அடைய முடியாது.

இவ்வாறு இறுதி நேரத்தில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தினால் உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்களின் அறிக்கைகளுக்கும் வெளிநாட்டு நிறுவனங்களினது அறிக்கைகளுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்படக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கு மாகாண சபைக்கும் அதிகாரங்கள் வேண்டும்

## அமைச்சர் வாசு மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்குமாகாண சபைக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து இனங்களுக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்த வேண்டுமாயின் வடக்கு மாகாண சபைக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இருக்கும் அதிகாரங்கள் அவற்றுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர சிங்கள மொழிக்கு இணையாக தமிழ் மொழியும் நாட்டில் செயற்படுத்தப்பட வேண்டும். கடந்த 30 வருட யுத்தம் காரணமாக வடக்கில் மாகாண சபை இயங்கவில்லை. இதனால் வடக்கு பகுதி மக்களுக்கும் ஏனைய மாகாண மக்களுக்கும் இடையில் போதிய தொடர்புகள் இருக்கவில்லை.

39 வருடகால போருக்கு பின்னர் அந்த தொடர்புகளை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அனைவரும் தமது கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் ஏனைய இனத்தவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

# மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டினை கட்டியெழுப்புவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் மதிப்பளித்து நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் உருவாகியுள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 970 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ரம்புக்கன் ஓயா நீர்த் தேக்கத்தின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் மக்களுக்கு புதிய புத்துணர்வை ஊட்டுகின்றன.

எம் மக்களின் பசுமைப் புரட்சியை இல்லாதொழிக்க அன்றைய ஏகாதிபத்திய வாதிகள் வாவி மற்றும் குளங்களை அழித்து இந்நாட்டில் பட்டினிச் சாவை ஏற்படுத்தினர்.

1970 ஆம் ஆண்டில் இந்நாட்டின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் மற்றும் மைத்திரிபால சேனநாயக்க போன்றோர் இந்த நாட்டில் அபிவிருத்திக்காக பாடுபட்டனர்.

அந்த வேளையிலேதான் இந்த ரம்புக்கன் ஓயா அபிவிருத்தித் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர். அப்படியே நின்றுபோன இத்திட்டம் பல வருடங்களின் பின்னர் இன்றுதான் பூர்த்தியாகியுள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுவிக்கப்பட்டதனைப் போன்று வரட்சி மற்றும் பட்டினியிலிருந்தும் நாட்டின் சந்ததி விடுவிக்கப்பட்டு தன்னிறைவு மிக்க நாடாக கட்டியெழுப்பப்படும்.

நீர்வளம் நமது நாட்டின் முக்கிய வளங்களில் ஒன்றாகும் . அந்த உன்னதமான வளங்களின் உரிமை நம்நாட்டு மக்கள் வசம் இருக்க வேண்டும்.

எனவே எல்லோருக்கும் மதிப்பளித்து இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டினைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என்றார். (அ-2)

# இலங்கையில் எயிட்ஸ் தீவிரம்; ஆறு மாதத்துக்குள் 16 பேர் பலி

இலங்கையில் தீவிரமாகப் பரவத் தொடங்கியிருக்கும் எயிட்ஸ் நோய் காரணமாக இவ்வாண்டின் முதல் அரையாண்டு பகுதியில் சுமார் 16 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரசேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் படையெடுப்பு என்பன காரணமாக அண்மைக்காலங்களில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் நாட்டில் 16பேர் எயிட்ஸ் நோயினால் உயிரிழந்துள்ளதாக எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத் திட்டப் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த 6 மாத காலப் பகுதியில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 90 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 7 குழந்தைகளும் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை.மாவட்டத்திலுள்ள

# பதவி வெற்றிடங்களை நிரப்புக

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் நிலவு கின்றன. இம்மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகளும் 136 கிராம சேவகர் பிரிவுகளில் 624 கிராமங்கள் உள்ளன. இதில் 88 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மட்டுமே நிரந்தர கிராம சேவையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். எனவே, நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிக் குமாறு முல்லை.மாவட்ட அரசாங்க அதிபருக்கு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இம் மாவட்டத்தில் கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட மக்கள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர். இங்கு 46 கிராமசேவகர் பிரிவுகளுள்ள நிலையில் 28 கிராம சேவையாளர்கள் மட்டுமே நிரந்தரமாக கடமையாற்றி வருகின்றனர்.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி, செம்மலை கிழக்கு, உப்புமாவெளி, சிலாவத்தை, வண்ணாங்குளம், முல்லைத்தீவு பட்டிணம், மணற்குடியிருப்பு, செல்வபுரம், முள்ளியவளை தெற்கு, கணுக்கேணி மேற்கு, குமாரபுரம், தண்ணிமுறிப்பு, அம்பலவன் பொக்கணை ஆகிய 18 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் நிரந்தர சேவையாளர் நியமிக்கப்படாததுடன் நிரந்தர பிரதேச செயலாளரும் இல்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் 19 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன.

ஆயினும் 14 கிராம சேவையாளர்களே நிரந்தரமாக கடமையாற்றி வருகின்றனர். விசுவமடு மேற்கு, வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், மந்துவில், இரணைப்பாலை ஆகியவற்றுக்கு நிரந்தர கிராமசேவையாளர் இல்லை. அத்துடன் நிரந்தர பிரதேச செயலாளரும் இன்றியே காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் 2009 இல் மீள்குடியேற்றப்பட்டு 27 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஆயினும் நிரந்தரமாக 16 கிராம சேவையாளர்கள்மாத்திரமேகடமையாற்றுகின்றனர்.

புளியங்குளம், பழம்பாசி, தண்டுவான், பெரிய எத்திமடு, ஒதியமலை, பெரியகுளம், திருமுறிகண்டி, அம்பகாமம், பண்டாரவன்னி, கணேசபுரம், மணவாளன்பட்ட முறிப்பு போன்ற 11 கிராம சேவையாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படாததுடன் உதவி பிரதேச செயலரும் நிரந்தரமாக இல்லை.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 2009 இல் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு 20 கிராம சேவகர் பிரிவுகளில் 15 கிராம சேவையாளர்கள் மட்டுமே நிரந்தர சேவையாற்றி வருகின்றனர்.

உயிலங்குளம், கோட்டைகட்டியகுளம், புத்துவெட்டுவான், துணுக்காய், திருநகர் ஆகிய 5 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நிரந்தர சேவையாளர் தேவைப்படும் அதே வேளை உதவி பிரதேச செயலரும் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவினுள் 2009 இல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. இங்கு 15 கிராம சேவையாளர் பிரிவுகளில் 9 கிராம சேவையாளர்கள் மட்டுமே நிரந்தரமாக காணப்படுகின்றனர்.

பொன்நகர், சிவபுரம், அம்பாள்புரம், பூவரசன்குளம், வன்னிவிளாங்குளம், கரும்புள்ளியான் ஆகிய 6 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் நிரந்தர கிராமசேவையாளரும் நிரந்தர பிரதேச செயலரும் நியமிக்கப்பட வேண்டும்.

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 9 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதில் 6 கிராம சேவையாளர்கள் மட்டுமே நிரந்தரமாக பணியாற்றி வருகின்றனர்.

ஜனகபுர, நிக்கவெவ தெற்கு, கஜகாபுர ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் நிரந்தரமாக கிராம சேவையாளர் தேவைப்படுவதுடன் நிரந்தர பிரதேச செயலரும் நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வெற்றிடமாகவுள்ள பதவிகளில் உதவி பிரதேச செயலரின் பணியினை பிரதேச செயலரும் பிரதேச செயலரின் பணியினை உதவிப் பிரதேச செயலரும் பதில் கடமையாக மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு கிராம சேவையாளர்கள் வெற்றிடத்திற்கு ஒருவாரத்தில் இரண்டு நாட்கள் மாத்திரமே பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால் முல்லை.மாவட்டத்திலுள்ள 39 ஆயிரத்து 352 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 984 பேரும் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு நிரந்தரமாக உத்தியோகத்தர்களை அமைக்க முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(9-267)

## வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாசார விழா

(பூந்தோட்டம்)

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து இயல், இசை, நாடகத்தால் இன்பத்தமிழ் வளர்ப்போம் எனும் தொனிப் பொருளில் நடத்தும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா எதிர் வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ச.மோகநாதன், வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.ப.கணேசலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு விழாவில் வரவேற்புரையை வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் வே.ஆயகுலன் ஆற்ற காலம் தோறும் தமிழ் எனும் தலைப்பில் சொற்பொழிவை இலக்கியசுடர் ஐ.கதிர்காமசேகரம் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து மருதமுகில் நூல் வெளியீடு இடம்பெற்று நூலின் வெளியீட்டுரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் மி.சூசைதாசனும் ஏற்புரையை நூலாசிரியர் ஜெ.கோபிநாத்தும் ஆற்றவுள்ளனர்.

அத்தோடு நல்லதோர் வீணை செய்வோம் எனும் தலைப்பில் கவிக்கதிர் தம்பித்துரை ஐங்கரன் தலைமையில் பல கவிஞர்கள் பங்கேற்கும் கவியரங்கமும் இன்றைய உலகில் தமிழர் பாரம்பரியம் பெரிதும் பின்பற்றப்படுகின்றதா? பின்தள்ளப்படுகின்றதா? எனும் தலைப்பில் பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நாடக கலாமன்றத்தினரால் அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, ஏழுபிள்ளை நல்ல தங்காள் ஆகிய இசை நாடகங்களும் பண்டார வன்னியன் என்ற வரலாற்று நாடகமும் அரங்கேறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (9-266)




## நீர்ப்பம்பி திருட்டு

(கனகபுரம்)

கிளிநொச்சி கண்ணன்கோவில் உள் கிணற்றுக்கு அருகில் இருந்த நீர்ப்பம்பி கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.(ம-259)






வவுனியா, மன்னார், மாங்குளம் ஆகிய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 62 பொலிஸார் தமிழ் மொழிப் பயிற்சியினை பூர்த்தி செய்து வெளியேறிய நிகழ்வு அண்மையில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா மற்றும் மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் எச்.விக்கிரமசிங்க உரையாற்றுவதையும் பயிற்சியை நிறைவு செய்த பொலிஸாரின் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று முன்தினம் காலை விசேட நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் ***விடிவெள்ளி*** என்னும் சிறப்பு நாடகம் இடம் பெற்றது. அந்த நாடக காட்சியினையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ். ஆர். கரன்)


# வின்சன் டீ போலுக்கு பாராட்டுவிழா

திருவாளர் பிரான்சிஸ் வின்சன்டீ போல் அவர்களின்
(முன்னாள் உப தலைவர், நகரசபை, பருத்தித்துறை,
தலைவர் கிராம அபிவிருத்திச்சங்கம், பருத்தித்துறை- கிழக்கு)
75ஆவது அகவையும் 50 வருடப் பொதுச்சேவையையும்
பாராட்டிக் கௌரவிக்கும்
**மாபெரும் பாராட்டுவிழா**
காலம்: 22.07.2013 திங்கட்கிழமை இன்று மாலை 3.30 மணி
இடம்: பருத்தித்துறை நகரசபை மகாநாட்டு மண்டபம்

**தலைவர்**
திரு.சிவா கிருஷ்ணமூர்த்தி J.P (தலைவர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்த பிரஜைகள் பேரவை)

**முதன்மை விருந்தினர்**
வணக்கத்துக்குரிய பிதா. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் (குருமுதல்வர், யாழ்.மறை மாவட்டம்)

**கௌரவ விருந்தினர்கள்**
வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் (பணிப்பாளர், வட.பிராந்திய சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்)
திருமதி உஷா சுபலிங்கம் (உதவி பிரதேச செயலர், பருத்தித்துறை)
அருட்திரு ஜெரோம் செல்வநாயகம் அடிகளார் (அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)
பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் (ஓய்வுநிலை பீடாதிபதி, வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் நா.ஞானக்குமாரன் (முன்னாள் பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
வைத்திய கலாநிதி கே.கே.சிவராமன் (பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

**ஆசியுரையாளர்கள்**
சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள்
(பிரதமகுரு, நெல்லண்டை அம்பாள் தேவஸ்தானம், பருத்தித்துறை)
வணபிதா.ஜோன். மௌலீஸ் அடிகள்
(பங்குத்தந்தை, சென்.தோமஸ் தேவாலயம், பருத்தித்துறை)
அருட்சகோதரி மேரியூட் லூமினா ஜோச்
(அதிபர், சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை)

**வரவேற்புரை**
திரு.சி.தேவராசா (செயலாளர், புனித தோமையர் அருட்பணிச்சபை , பருத்தித்துறை)
**தலைமையுரை:-** திரு.சிவா கிருஷ்ணமூர்த்தி J.P

**பெருமைதரும் விருந்தினர்களும் பாராட்டுரையாளர்களும்**
தேசமானி திரு.சபா இரவீந்திரன் சட்டத்தரணி
(தவிசாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை)
திரு.ந.அனந்தராஜ் (தவிசாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை)
திரு.பூ.சஞ்சீவன் (தவிசாளர், பிரதேச ஆட்சிமன்றம், பருத்தித்துறை)
வைத்தியகலாநிதி க.மயிலேறும்பெருமாள்
(மாவட்ட வைத்திய அதிகாரி, வல்வெட்டித்துறை)
திருமதி செல்வமலர் சுந்தரேசன்
(அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)
திரு.ந.தெய்வேந்திரராஜா
(அதிபர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
திரு.ச.இராகவானந்தன் (சட்டத்தரணி)
திரு.ஜே.எஸ். இராஜரட்ணம்
(ஓய்வுநிலை உப அதிபர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
திரு.இராஜ் சுப்பிரமணியம்
(ஓய்வுநிலை கணக்காளர், கல்வி அமைச்சு)
திரு.ச.திரவியராசா
(அதிபர், வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை)
திரு.க.க.யோகநாதன்
(அதிபர், சிவப்பிரகாச மகாவித்தியாலயம், தும்பளை)
திரு.அல்போன்ஸ் அன்ரனி வின்சன் மரியநாயகம்
(அதிபர், கலட்டி, றோ.க.ஆண்கள் பாடசாலை)
திரு.வ.கருணாமூர்த்தி
(தலைவர், கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம்,
வடமராட்சி வடக்கு)
திரு.யோ.இருதயராஜா
(தலைவர், கலைஞர் வட்டம், பருத்தித்துறை)
திரு.சி.பத்மநாதன் J.P
(தலைவர், வர்த்தகர் சங்கம், பருத்தித்துறை)
கலைப்பரிதி திரு.மா.இரத்தினசோதி
(பயிற்சியாளர், யோகக்கலை-தற்காப்புக்கலை)
திரு.நா.ஜெயபாஸ்கரன்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
திரு.ஏ.என்.எஸ். திருச்செல்வம்
(பருத்தித்துறை பிரதேசசபை, ஓய்வுநிலை பிரதம நூலகர்)
திரு.இ.து.குலசிங்கம்
(உபதலைவர், வடமராட்சி வடக்கு, கலாசார பேரவை)
செல்வி. செல்வசுகுணா சேனாதிராஜா
(கலாசார உத்தியோகத்தர், பருத்தித்துறை)

**நடன நிகழ்ச்சிகள்**
**ஏற்புரை:-** திரு.பி.வின்சன் டீ போல்
**நன்றியுரையாளர்**
திரு.அ.மை. இராஜ்குமார்
(விழாக்குழுச் செயலாளர்)

அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.



விழாக்குழு.

(சி/4092)


# விஞ்ஞானமாணி தாதி பட்டதாரிகளை இணைத்தல்

தாதியசேவைக்குரியமறுபயிற்சிமற்றும்இணைப்புப்பாடநெறிக்காக விஞ்ஞானமாணி தாதிப்பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக இலங்கை பிரஜை களிடமிருந்து சுகாதார அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் விஞ்ஞானமாணி தாதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். விண்ணப்பமுடிபு திகதி ன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 28 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். குறித்த பட்டப்படிப்பு, விண்ணப்பப் படிவம் முடிவுத்திகதிக்கு முன்னைய திகதியாக இருக்க வேண்டும்.

தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதிக்குத் தொடர்ச்சி யாக 3 வருடங்கள் வதிவிடத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி கள் சுகாதார அமைச்சின் மூலம் நடத்தப்ப டுகின்ற பொது உளச் சார்பு மற்றும் பொது அறிவு வினாக் கள் அடங்கிய ஒரு மணித்தியால வினாப்பத்திரத்திற்கு விடை அளிக்க வேண் டும்.

விண்ணப்பதாரிகள் வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைய சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் 300 ரூபா பெறுமதி கொண்ட முத்திரையை ஒட்டி கையொப்பம் இட்டு முத்திரையை இரத்துச் செய்ய வேண்டும். சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபால் உறையிலிட்டு அதன் இடது பக்க மேல்மூலையில் தாதி **சேவைக்குரிய மறுபயிற்சி மற்றும் இணைப்புப் பாடநெறிக்காக விஞ்ஞானமாணி தாதிப் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல் -2013** எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் (நிர்வாகம்) இல.01, சுகாதார அமைச்சு, சுவசிரிபாய, இல.385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு -10 எனும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக தகவல்களை வலம்புரி காரியாலயத்திலோ அல்லது எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி பத்திரிகையிலோ பார்வையிடமுடியும். (அ)


## இளங்கோ சனசமூக நிலைய கட்டடத்துக்கு நிதி உதவி செய்த

# வடமாகாண ஆளுநரும் டக்ளஸ் தேவானந்தாவும்



செல்வாபுரம் இளங்கோ ச.ச நிலையத்துக்கு 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா, இளங்கோ ச.ச நிலையத்தின் கட்டடத்து புனர்நிர்மாண வேலை செய்வதற்கு இளங்கோ சனசமு நிலையம் கேட்டதற்கு வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் இளங்கோ சனசமூக நிலைய நிர்வாகமும் செல்வாபுர பொதுமக்களும் (மாதர் சங்கம் முன்பள்ளி நிர்வாகம், செல்வாபுரம்) வீரபத்திர ஆலய பரிபாலனசபை, இளங்கோ விளையாட்டுக் கழகம், நாகதீபா முன்பள்ளி நிர்வாகம் மன மார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் (கொன்ஸ்ரன்ரைன் ஜக்கில்) அவர்களுக்கு அடிக்கடி எமது கிராமத்துக்கு வருகை தந்து இளங்கோ சனசமூக நிலையத்தின் கட்டடத்தை கட்டுவதற்கு முயற்சி எடுத்து தந்த தற்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றார்கள். ஈழமக்கள் ஜனநாயக கட்சி கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் அருணாசலம் சந்திரசேகரத்திற்கும் எமது மக்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றார்கள்.

அத்துடன் செல்வாபுரம் மக்களின் குடிதண்ணீர் வழங்குவதற்கு தங்களின் பங்களிப்பு வழங்கியது திறப்பு விழாவில் கலந்து கொண்டு குடிதண்ணீரை ஆரம்பித்து வைத்துள்ள வடமாகாண ஆளுநர் அவர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் நன்றிகள். இளங்கோ ச.ச நிலையம் தெரிவித்துக் கொள்வதுடன் தங்கள் பின்தங்கிய கிராமங்களின் நலன்களில் அக்கறை கொண்டு தொடர்ந்தும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

(சி/4084)

***செல்வாபுரம் பொதுமக்கள்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத் நகரில் கார் வெடிகுண்டு தாக்குதல்; 34 பேர் பரிதாப மரணம்

## பெருமளவானோர் காயம்

(பக்தாத்)

பக்தாத் நகரில் ரம்ழான் விருந்தை சீர்குலைக்கும் வகையில் தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் 34இற்கும் அதிகமானோர் பலியாகினர். பெருமளவானோர் காயமடைந்தனர்.ஈரானில் ரம்ழான் மாதம் தொடங்கியதிலிருந்தே பல்வேறு இடங்களில் தொடர் வெடிகுண்டு தாக்குதல்களை தீவிரவாதிகள் நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில் ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் உள்ள தேநீர்க் கடையில் நேற்று முன்தினம் ஏராளமானோர் நோன்பு திறக்கும் விருந்தில் பங்கேற்றனர். அப்போது கார் வெடிகுண்டை தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர்.

இதில் 34 இற்கும் அதிகமானோர் பலியாகினர். பெருமளவானோர் படுகாயமடைந்தனர். இதேபோல் ஈராக்கின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கர்ரடா என்ற இடத்தில் ஷொப்பிங் மாலில் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

பக்தாத்தில் மேற்கு பகுதியிலுள்ள பையா என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்த மற்றொரு தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். ஜபார்னியா என்ற இடத்தில் நடத்த மற்றொரு வெடி குண்டு தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்களில் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இதனால் குறித்த பகுதிகளில் பதற்றம் அதிகரித்துள்ளது. (அ-2)

# உலக பொருளாதாரத்தை மேம்படுத்த ஜி-20 நாடுகள் முடிபு



(மொஸ்கோ)

உலகளவில் பொருளாதாரத்தை மேம்படுத்த வேலைவாய்ப்புக்கும் வளர்ச்சிப்பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பது என ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் கூட்டம் இரண்டு நாட்களாக நடைபெற்றன. இதில் அமெரிக்கா,பிரான்ஸ் உள்ளிட்ட அபிவிருத்தியடைந்த நாடுகளும் பிரேசில், இந்தியா உள்ளிட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என முடிவு எடுத்திருப்பதாக அறிக்கை வெளியிடப்பட்டது.

### உறுதியான நடவடிக்கை

உலகளவில் பொருளாதாரத்தை மேம்படுத்த உறுதியான, நிலையான நடவடிக்கை எடுக்கப்படும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி தொடர்பான ஆய்வு அமைப்பின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான அறிக்கையை ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்கிறோம்.

### வரி ஏய்ப்பு தடுப்பு

சர்வதேச நிறுவனங்களின் வரி அறவீட்டு நடவடிக்கைகளை தடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வருவாய் அதிகரித்து பட்ஜெட் பற்றாக்குறையை குறைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இஸ்ரேஸ்-பாலஸ்தீன் இடையே அமைதி பேச்சு ஆரம்பிக்குமா?

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை ஏற்படுத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இஸ்ரேல் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தங்கள் நாட்டு சிறையில் இருக்கும் பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி கடந்த சில மாதங்களுக்கு முன் ஆறாவது முறையாக இஸ்ரேலுக்கு வருகை தந்த போது நடந்த நான்கு நாட்கள் பேச்சு வார்த்தையின் முடிவில் இந்த முடிவு எட்டப்பட்டது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

ஜோன் கெர்ரி அடுத்த வாரத்தில் இது குறித்த முதல் சுற்றுப் பேச்சு வார்த்தை வோஷிங்டனில் தொடங்கலாம் என்று அறிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை உடன்பாடு எட்டினால்தான் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதால் ஜோன் கெர்ரி இதில் தீவிர மாக முயற்சி செய்தார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய மனித உரிமை கழகத்தின் கணக்கீட்டின் படி 4 ஆயிரத்து 817 பாலஸ்தீனியர்கள் கைதிகளாக உள்ளதாகவும் அவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரியவருகின்றது.

பாலஸ்தீனியர்களும் அவர்கள் தரப்பில் கடந்த ஒன்பது மாதங்களாக சமரசப் பேச்சுவார்த்தைக்கு முயற்சித்து வந்ததாக பிரதமர் லிகட் பெடிநோவின் கட்சி உறுப்பினரான ஸ்டெய்னிட்ஸ் தெரிவித்தார்.

ஆனால் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்க் மற்றும் கிழக்கு ஜெருசலேமில் நடைபெறும் கட்டுமானத் தீர்வு நிறுத்தம் போன்ற பாலஸ்தீனத்தின் முன் நிபந்தனைகளை இஸ்ரேல் ஏற்க மறுத்துவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.


கட்டுமான நிறுத்தம் அல்லது இஸ்ரேலின் சலுகைகளோ எல்லைகளோ வரையறுக்கப்படுவதற்கு முன்னர் பாலஸ்தீனம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன்பாடாது என்றும் அவர் கூறினார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது கட்டுமானப் பணிகள் குறித்த விடயத்தில் உடன்படிக்கை ஏற்படாததால் பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது.

இத்தகைய கட்டுமானங்கள் சர்வதேச விதிகளுக்கு முரணானவை என்ற போதிலும் இஸ்ரேல் அதனை மறுத்துள்ளது. (அ- 2)




# லாங்மார்ச் -4சி செயற்கைக்கோளை விண்ணுக்குச் செலுத்தியது சீனா




செயற்கைக்கோள்கள் மூன்றை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த செயற்கைக்கோள்கள் லாங் மார்ச்- 4சி என்ற ரொக்கெட் மூலம் தாய்வான் செயற்கைக் கோள் ஏவுமையத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டன.

அறிவியல் ஆராய்ச்சி மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் இந்தச் செயற்கைக்கோள்கள் செலுத்த ப்பட்டதாக சீன செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

லாங் மார்ச் ரக ரொக்கெட் இப்போது 179 முறையாக செயற்கைக் கோள்களை எடுத்துச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)



எகிப்து பயணித்துள்ள ஜோர்தான் மன்னர் இரண்டாம் அப்துல்லா (இடது) தலைநகர் கெய்ரோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி அட்லி மன்சோரை சந்தித்துக் கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவுடனான உறவு குறித்து வெனிசுலா புதிய முடிபு

(காரகாஸ்)

அமெரிக்காவுடனான உறவைப் புதுப்பிக்கும் முயற்சியை கைவிடுவதாக வெனிசுலா அறிவித்துள்ளது.

ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள சமந்தா பவர் வெனிசுலாவுக்கு எதிராக அறிக்கை விடுத்ததையடுத்து அந்த நாடு இந்த முடிவை முன்னெடுத்துள்ளது.

வெனிசுலா தினமும் 9 இலட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஆனாலும் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் வோஷிங்டன் காரகாஸ் நகரங்களில் பரஸ்பரம் இரு நாட்டு தூதரகங்களும் செயற்படவில்லை.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்கெர்ரி மற்றும் வெனிசுலா வெளியுறவுத்துறை அமைச்சர் இலியாஸ் ஜவுவா ஆகிய இருவரும் கடந்த ஜூன் மாதம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அப்போது இருநாடுகளுக்கிடையே மீண்டும் உறவைத் தொடருவது என முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த முயற்சியை கைவிடுவதாக தற்போது வெனிசுலா அறிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனி தாவது எங்கும் காணோம்.

— பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 'ல' கரத்தில் தொடங்கி 'ள' கரத்தில் நிறைவடைதல்

நேற்றைய தினம் இப்பகுதியில், மங்கல ஒலி... என்ற தலைப்பில் சீன வெடியின் கலாசாரம் பற்றி பிரஸ்தாபித்திருந்தோம்.

நேற்றைய ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் நம் அன்புக்குரிய சிலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு **மங்கலம்** என்பதா? **மங்களம்** என்பதா? சரியானது என்று கேள்வி எழுப்பியிருந்தனர்.

அவர்களின் ஆர்வத்திற்கு முதற்கண் நன்றிகள். அதேநேரம் அவர்களிடம் எழுந்த சந்தேகம் நியாயமானது என்பதை மறுத்துவிட முடியாது.

அவர்களின் கேள்விக்கான விடை **மங்கலம், மங்களம்** என்ற இரண்டும் சரி என்பதாகும்.

இங்குதான் தமிழ் மொழியின் பண்பாட்டுயர்வு தெரிகின்றது. ஒரு நிகழ்வின் அல்லது வைபவத்தின் தொடக்கத்தை மங்கலம் என்றும் நிகழ்வின் நிறைவை மங்களம் என்றும் அழைத்தனர்.

மங்கலம் என்பது 'ல' கரத்தையும் மங்களம் என்பது 'ள' கரத்தையும் கொண்டது.

'ல' கரம் என்பது நாவின் தொடக்க உச்சரிப்பு. 'ள' கரம் என்பது நாவின் நடுப்பகுதிக்குரியது. 'ழ' கரம் என்பது நாவின் அடிப்பகுதியின் உச்சரிப்பு.

அப்படியானால் 'ல' கரத்தில் மங்கலம் தொடங்கினால் நிறைவு அல்லது முடிபு 'ழ' கரத்தில் அல்லவா வரவேண்டும் என்று வாதிடுவதும் தவறல்ல.

இங்குதான் தமிழ் மொழியின் சிறப்பை அவதானிக்க முடியும். 'ழ' கரம் என்பது உச்சஸ்தாயி. அது உலகில் எந்த மொழியிலும் இல்லாத உச்சரிப்பைக் கொண்டது. அதற்கு ஈடும் இணையும் வேறில்லை. அப்படியானால் அது அந்தமானது.

எனவே அந்த அந்தத்தை ஒரு நல்ல நிகழ்வுக்கு வழங்குவது ஏற்புடையதல்ல என்று கருதப்பட்டது.

இதன் காரணமாக மங்களம் என்பதை நிறைவுக்கு கொண்டு வந்தார்கள். இந்த நிறைவின் 'ள' கரம் 'ழ' கரம் மட்டும் இடைவெளி கொண்டது.

எனவே நிச்சயமாக நிகழ்வின் நிறைவு இறுதியல்ல என்பதால் மங்களம் என்பது நிறைவின் போதான உச்சரிப்பாயிற்று.

இதனை சுருங்கக் கூறின் மங்கலம் என்ப மனைமாட்சி... என்று வள்ளுவர் 'ல' கரத்தின் வழியில் இல்லறத்தின் தொடக்கத்தை வியம்புகிறார்.

அதேநேரம் நிகழ்வின் நிறைவின் மங்களம் சுபமங்களம் என்று 'ள' கரத்தில் கூறப்படுகின்றது.

ஆக, 'ல' கரத்தில் தொடங்குதல் என்பதும் 'ள' கரத்தில் நிறைவடைதல் என்பதும் தமிழ் மொழியில் இருக்கக்கூடிய மிகச்சிறப்பான சொற்களாகும்.

ஆகவே, மங்கலம், மங்களம் என்ற இரு நிலை 'ல' கர 'ள' கர வேறுபாட்டின் பொருள் உணர்ந்து எழுதுவதும் உச்சரிப்பதும் சாலச் சிறப்புடையதாகும்.

# கல்வி நிர்வாக சேவையின் பரீட்சை விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III-ம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய விண்ணப்பதாரிகளால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பம் தொடர்பான மேலதிக தகவல்களை வலம்புரி காரியாலயத்திலோ, அல்லது 26-ம் திகதி வெளியிடப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலையோ பார்வையிடலாம். (செ)

★ ★ ★ ★ ★ ★ ★

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-ம் வகுப்பின் II-ம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

இப்பரீட்சைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

வர்த்தமானிப் பத்திரிகையின் மாதிரி படிவத்திற்கு அமைய விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல்வேண்டும்.

இவ்விண்ணப்பம் தொடர்பான மேலதிக தகவல்களை வலம்புரிக் காரியாலயத்திலோ அல்லது 26-ம்திகதிவெளியிடப்படவுள்ள வர்த்தமானியிலோ பார்வையிட முடியும். (செ)

## சிரமதான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சமூக ஒருமைப்பாட்டுவாரத்தை முன்னிட்டு யாழ்.மொழிச் சங்கம் அமைச்சில் யாழ்.மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து நடத்தும் சிரமதான நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு அராலி வீதி ஓட்டுமடத்தில் உள்ள மலரும் மொட்டுக்கள் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இச்சிரமதான நிகழ்வில் ஓட்டுமடம் மலரும் மொட்டுக்கள் குழுவினரும் கிராம மக்களும் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## குருபூர்ணிமா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் குருபூர்ணிமா தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இல.17, மருதனார்மடம்வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள குறித்த நலன்புரி நிலையத் தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை, குரு கீதை வாசிப்பு, தீபாராதனை என்பன இடம் பெறவுள்ளது. (அ-5)

★ ★ ★ ★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் குருபூர்ணிமா தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை அதி காலை 4.45 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் சேர்.பொன். இராமநாதன் வீதியிலுள்ள குறித்த நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் அதிகாலை 4.45 மணிக்கு ஓம்ஹாரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் என்பன இடம்பெற்று தொடர்ந்து 8.45 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றமும் அதனைத் தொடர்ந்து வேதபாராயணம், பாத அபிஷேகம், தியானம், பஜனை, சிறப்புரை என்பன இடம்பெறவுள்ளன. (அ-5)

# வின்சன் டி போலுக்கு பாராட்டுவிழா இன்று

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்த பிரஜைகள் பேரவையும் பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர் சங்கமும் இணைந்து பொது அமைப்புக்களின் ஆதரவுடன் பிரான்சிஸ் வின்சன் டி போல் அவர்களின் 75 ஆவது அகவையும் 50 வருட பொதுச்சேவையையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை நகரசபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கொழும்பு இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் சிவா கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் வண. பிதா ஜஸ்தின் ஞானப்பிரகாசமும் கௌரவ விருந்தினர்களாக வடபிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் வண. பிதா ஜெரோம் செல்வநாயகம், யாழ். பல்கலைக் கழக வணிகத்துறை ஓய்வு நிலை பீடாதிபதி பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், யாழ். பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக் குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை நெல்லண்டை அம்மன் தேவஸ் தான குரு சிவ ஸ்ரீ சோமாஸ் கந்தராஜா, பருத்தித்துறை சென். தோமஸ் தேவாலயபங்குத்தந்தை ஜோண் மௌலீன் அடிகள், சென் தோமஸ் றோ.க பெண்கள் பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி யூட் லூமினா ஜோர்ஜ் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இவற்றுடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரன் என்பவரது 473263440V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் மற்றும் கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்த பிச்சையா ஜெயராமு என்பவரது 590813311V என்னும் இலக்கமுடைய தேசிய அடைய அட்டையும் நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ கால வாகன அனுமதி அட்டை (2012) அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வருகைதந்து தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக்கொள்ளலாம். (அ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஆண்டவன் கணக்கு



ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிட முடியும் என்று நீங்கள் கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்லன். நீங்கள் செய்து விட்டுக் கணக்குப் பார்த்து எனக்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டு மென்று கேட்டாலும்கூட கணக்கு சரியாக வராது. முன்பு, பின்பு செய்திருந்தால்கூடச் செயல் பாக்கி இருந்தால் பிடித்துக் கொள்வான். அவனிடம் ஒரு நியதி இருக்கிறது. நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக நல்லதையோ கெட்டதையோ உங்கள் நோக் கத்திற்குத் தக்கவாறு, செய்யும் திறனுக்கு தக்கவாறு அவன் செயல் விளைவாகத் தருவான்.

நீங்கள் நல்ல நோக்கத்தோடு நல்ல முறையில் செய்தால் செய்த செயலின் விளைவு எல்லாம் நல்ல விளைவாகவே இருக்கும். அதுதான் அவன் கொடுக்கக் கூடிய வரம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் நல்ல செயலையே செய்தோமானால் எல்லாமே நலம் விளையும் என்கிற பொழுது சமுதாயத்திற்கு நலம்தர வேண்டும் என்பது ஒன்று ஆயிற்று; கடமை செய்கின்றோம் என்பது ஒன்று ஆயிற்று. இரண்டாவதாக நல்லதையே ஒவ்வொரு செயலிலும செய்து கொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றலை நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்து விடுகிறது.

பின்பு நாம் இறைவனை தேடிக் கொண்டோ அல்லது போற்றிக் கொண்டோ இருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு இயக்கத்திலும் அவனுடைய இருப்பைக் கண்டு கொள்ளலாம். ஆக இறைவனை உணர்ந்து கொள்வது என்பது சமுதாயத்திற்கு நலம் தருவதாகும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களுடைய அடிப்படையான நோக்கம். இந்த அடிப்படையான நோக்கம் வெற்றிபெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் நல்ல செயலைச் செய்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். அதன் பின்பு செய்து பலன் காண வேண்டும். மற்றவர்களுக்கும் அதைப் பரப்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய விமான நிலையங்களை

# பயங்கரவாதிகள் தாக்கலாம்



(புதுடில்லி)

நாட்டிலுள்ள 7 முக்கிய விமான நிலையங்களை பயங்கரவாதிகள் தாக்கலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்படி சம்பந்தப்பட்ட விமான நிலைய பாதுகாப்பு துறையினரை தயாராக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய உளவுப்பிரிவுக்கு கிடைத்த தகவலில் தெரிய வந்துள்ள விபரம் வருமாறு,

**அரசுக்கு மிரட்டல் விடுக்க**

நாட்டில் விமான நிலையங்களில் திடீர் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர். இதற்கான தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். புதுடில்லி, மும்பை, பெங்களூர், சென்னை, ஆமதாபாத், ஐதராபாத், கௌவுகாத்தி ஆகிய 7முக்கிய விமான நிலையங்கள் பயங்கரவாதிகளின் சதி திட்ட பட்டியலில் உள்ளன.

மேற்கூறிய நிலையங்களில் சிறிய ரக விமானம் மூலம் பறந்து வந்து தாக்குதல் நடத்துவது, மற்றும் நமது நாட்டு விமானங்களை கடத்துவது, இதன் மூலம் பயணிகளை பணயக் கைதிகளாக வைத்து அரசுக்கு மிரட்டல் விடுக்க திட்டமிட்டு இருக்கின்றனர்.

குறிப்பாக புதிய சக்தி வாய்ந்த வெடி பொருட்களை பயன்படுத்த வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிய வருகிறது.

இதனால் சம்பந்தப்பட்ட விமான நிலையத்தில் பாதுகாப்பை பலப்படுத்திக்கொள்ளவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து மத்திய, மாநில பாதுகாப்பு துறை அதிகாரிகள் அவசர ஆலோசனை நடத்தினர். விமான நிலையங்களின் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

## ஆமைகளை கடத்திய இருவர் கைதாகினர்

வெளிநாடு ஒன்றில் இருந்து ஆமைகளை கடத்த முயன்ற இருவர் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையை வசிப்பிடமாக கொண்ட இருவர் 10 ஆயிரத்து 43 ஆமைகளை பொதி செய்யப்பட்ட நிலையில் சூட்கேஸில் வைத்து கடத்த முயன்றுள்ளனர்.

கொல்கத்தாவின் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் சோதனையிட்ட போதே இந்த கடத்தல் முயற்சி பிடிபட்டுள்ளது.

மேலும் இவர்கள் சீனாவிலிருந்து இந்தியாவின் ஊடாக சிங்கப்பூருக்கு ஆமைகளை கடத்த முயன்றமை அம்பலமாகியுள்ளது.(அ-2)

## உலகின் மிக வயதான இந்திய தாத்தா



இந்தியாவை சேர்ந்த தாத்தா ஒருவர் உலகில் வாழ்ந்து வரும் மிகவும் வயதான மனிதர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவருக்கு வயது 141. இவர் திருமணங்களை செய்துள்ளதுடன் 10 குழந்தைகளுக்கு தந்தையாகவும் இருக்கின்றார். இதேவேளை உறுதிப்படுத்தப்படாது நிலையில் இவரது வயது காணப்படுகின்றது.

எனினும் அரசினால் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழின் அடிப்படையில் 1872ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி பிறந்ததாகக் கருதப்படுகிறது.

இவரின் இறுதி மனைவி மிர்ஸா இவரை விட 60 வயது இளமையானவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.(அ-2)

# டெசோ ஒரு ஏமாற்று வேலை

ஈழத்தமிழின படுகொலையை தடுக்கக்கோரி முத்துக்குமார் தீக்குளித்தபோது அன்று முதல்வராக இருந்த முத்துவேல் கருணாநிதி மௌனமாக இருந்துவிட்டு இன்று டெசோ என்கிறார். டெசோ ஒரு ஏமாற்று வேலை என்பதை நாட்டு மக்கள் அறிவர் என ம.தி.மு.க. செயலாளர் வைகோ கூறியுள்ளார்.



நேற்று முன்தினம் திண்டுக்கல்லில் நடைபெற்ற ம.தி.மு.க. நிதியளிப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


ம.தி.மு.க. 20ஆம் ஆண்டை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஏனைய மாவட்டங்களை விட இம்மாவட்டத்தில் தான் நிதி அதிகமாக வழங்கியுள்ளீர்கள். இந்த நிதி மக்கள் கொடுத்த நிதி. இது மக்கள் இயக்கம். இந்த இயக்கம் வளர வேண்டும். வைகோ வளர வேண்டும் என்பதற்காக வாரி வழங்கியிருக்கிறார்கள்.

நாடே விடுதலைக்காக மடிப்பிச்சை ஏந்தியிருக்கிறது. குறிப்பாக காந்தி, நேதாஜி, அண்ணா போன்றோரை குறிப்பிடலாம்.

அண்ணா காலத்தில் கூட்டங்களில் சிறப்பு பேச்சாளர் பேசுவதற்கு முன்பு உங்களிடம் துண்டை ஏந்தி வருவார்கள். இயன்ற உதவியை செய்யுங்கள் என்று சொல்வார்கள்.

சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்கு தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்பதற்காக, ராம்ஜெத்மலானியை வழக்கறிஞராக வைத்து வாதாடியுள்ளோம். இதற்காக டில்லி, மும்பை என செல்ல வேண்டியிருந்தது. இதற்கான செலவை கழகம் தான் ஏற்றது.

ஈழ தமிழின படுகொலையை தடுக்கக்கோரி முத்துக்குமார் தீக்குளித்த போது அன்று முதல்வராக இருந்த கருணாநிதி மௌனமாக இருந்துவிட்டு இன்று டெசோ என்கிறார். டெசோ ஒரு ஏமாற்று வேலை என்பதை நாட்டு மக்கள் அறிவர் என்றார். (அ-2)



அசாம் மாநில தலைநகர் கௌவுகாத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த மாநில முதல்வர் தருண் கோகாய்க்கு வரவேற்பு அளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## சவுதியிலிருந்து வெளியேறுவதற்காக 3 இலட்சம் இந்தியர்கள் காத்திருப்பு


(ரியாத்)

சவுதியிலிருந்து வெளியேறுவதற்கான ஆவணங்களை பெறுவதற்காக இடைத்தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என அங்குள்ள இந்திய தூதரகம் எச்சரித்து உள்ளது. சவுதி அரேபியாவில் கடந்த மார்ச் மாதம் நிதாகத் என்ற புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன்படி சவுதியிலுள்ள அனைத்து நிறுவனங்களும் தங்கள் நிறுவனங்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தியிருந்தால் அங்கு கண்டிப்பாக உள்நாட்டைச் சேர்ந்த ஒருவரையும் வேலையில் இணைக்க வேண்டும். புதிய சட்ட விதிமுறைகளை அமுல்படுத்தாத நிறுவனங்கள் மீது, அந்நாட்டு தொழில் துறை கடும் நடவடிக்கை எடுக்கும். இதனால் சவுதி அரேபியாவில் பணியாற்றும் வெளிநாட்டினர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டது.

இதனால் பலர் வெளியேற்ற சான்றிதழ் வேண்டி தூதரகத்தை அணுகியுள்ளனர். இந்த சான்றிதழை பெற்று தருவதாக கூறி இடைத்தரகர் கும்பல் செயற்படுவதாக கூறப்படுகிறது. எனவே, இது போன்றவர்களிடம் பணத்தை கொடுத்து ஏமாற வேண்டாம். வெளியேற்ற சான்றிதழ் இலவசமாக வழங்கப்படுகிறது என சவுதியில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்திடம் மீண்டும் வீழ்ந்தது ஆஸி



லோர்ட்ஸ் டெஸ்டில் சொதப்பிய அவுஸ்திரேலிய அணி, இங்கிலாந்திடம் 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி, வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து வென்றது.

இரண்டாவது டெஸ்ட், லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 361, அவுஸ்திரேலியா 128 ஓட்டங்கள் எடுத்தன.

பின், இரண்டாவது இன்னிங்சை துவக்கிய இங்கிலாந்து அணி, மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில், 5 விக்கெட்டுக்கு 333 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணியின் பேர்ஸ்டோவ் (20) ஏமாற்றினார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜோ ரூட் (180) இரட்டை சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கு 349 ஓட்டங்கள் எடுத்து "டிக்ளேர்" செய்தது.

**விக்கெட் மடமட:**

பின், 583 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை துவக்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஷேன் வோட்சன் (20) ஏமாற்றினார். மற்றொரு தொடக்க வீரர் ரோஜர்ஸ் (6), சுவான் "சுழலில்" போல்டானார். அடுத்து வந்த பிலிப் ஹியுஸ் (1) நிலைக்கவில்லை.

**கிளார்க் ஆறுதல்:**

பின் இணைந்த அணித் தலைவர் மைக்கேல் கிளார்க், உஸ்மான் கவாஜா ஜோடி நிதானமாக ஆடியது. நான்காவது விக்கெட்டுக்கு 98 ரன்கள் சேர்த்த போது, டெஸ்ட் அரங்கில் 27வது அரைசதம் அடித்த கிளார்க் (51 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இவருக்கு ஒத்துழைப்பு தந்த கவாஜா, தனது 2வது டெஸ்ட் அரைசதத்தை பதிவு செய்தார். இவர், 54 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஸ்டீவன் ஸ்மித் (1), ஆஷ்டன் ஏகார் (16), பிராட் ஹாடின் (7), பீட்டர் சிடில் (18) நிலைக்கவில்லை.

கடைசி கட்டத்தில் பட்டின்சன், ஹாரிஸ் தொல்லை கொடுத்தனர்.



நிர்ணயிக்கப்பட்ட ஓவர் முடிந்த நிலையில், நல்ல வெளிச்சம் இருந்ததால் இங்கிலாந்து அணி கூடுதலாக அரைமணி நேரம் பந்துவீச முடிவு செய்தது.

இதில், 3 பந்து மீதமிருக்கையில் சுவான் "சுழலில்" பட்டின்சன்(35) ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்சில் 235 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டு களையும் இழந்து தோல்வி அடைந்தது.

347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து அணி, டெஸ்ட் வரலாற்றில் தனது மூன்றாவது சிறந்த வெற்றியை பதிவு செய்தது. தவிர, தொடரில் 2-0 என வலுவான முன்னிலை பெற்றது.

## கூட்டமைப்பு வேட்பாளர்....

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு வழங்கப்பட்ட 4 ஆசனங்களில் யாழ் வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம் மற்றும் சூழலியலாளர் ஐங்கரநேசன் மாதகலைச் சேர்ந்த மணியம், மற்றுமொருவரும் இடம் பெறுகின்றனர்.

ரெலோவில் சிவாஜிலிங்கம், மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் களமிறங்குகின்றனர். தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் சங்கையாவும் தலைவர் ஆனந்தசங்கரியும் களமிறங்க உத்தேசித்திருப்பதாக கூறப்படுகின்றது. தமிரசுக் கட்சியை சேர்ந்த கஜதீபன் புளொட்டிற்குரிய 2 ஆசனங்களில் ஒன்றை பெற்றுக்கொண்டு களமிறங்க உள்ளதாகவும் புளொட் தலைவர் சித்தார்த்தனும் இம்முறை வட மாகாணத் தேர்தலில் குதிக்க உள்ளதாகவும் தெரியவருகின்றது

எது எப்படியிருப்பினும் முன்னதாக கிடைத்த இந்த பெயர் விபரங்களிற்கு மாறாக வேட்பாளர்கள் இறுதி நேரத்தில் மாற்றப்படக்கூடிய ஏது நிலைகளும் காணப்படுகின்றன. கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சி செயலாளர் மாவை சேனாதிராஜாவே வேட்புமனுக்களை தாக்கல் செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவில் இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பவற்றுக்கு தலா 2 ஆசனங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி, மற்றும் புளொட்டுக்கு தலா ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றுக்கு தலா 3 ஆசனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு ஒரு ஆசனமும் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு 3 ஆசனங்களும், இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்பவற்றுக்கு தலா 2 ஆசனங்களும்ஒதுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ரெலோ 3, இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு தலா 2 ஆசனங்களும் புளொட்டுக்கு ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர் விபரம் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை. எனினும் இது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு தரப்பிலிருந்து தகவல் எதுவும் உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-4)

## விக்னேஸ்வரனின்....

ஒரு சட்ட அறிஞர். மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். ஆன்மீகவாதி தனக்காக இல்லாமல் மக்களுக்காக சேவையாற்றக் கூடியவர். கூட்டமைப்பிலுள்ள ஐந்து கட்சிகளினதும் ஏகோபித்த முடிவின் படியே அவர் முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். இவரைத் தெரிவு செய்ததால் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் குத்துவெட்டு, இரா.சம்பந்தனின் தலைமைக்கு ஆபத்து என்று சிங்களப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

சிங்கள பேரினவாதக் கட்சிகள் சி.வி.விக்னேஸ்வரன் நிச்சயம் முதலமைச்சராவார் என்று உறுதியாகத் தெரிந்த பின்னர் கனவில் பிதற்றுவது போல் ஏதோதோ கூறி வருகின்றன. தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்காததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கொழும்பு சொல்வதை கேட்டு செயற்பட வேண்டும் என்பது தவறு. தமிழ் மக்களுக்கும் சுயகௌரவம் இருக்கின்றது. அரசுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் செயற்படுபவர்கள் பேசுபவர்களுக்கு அரசு புலி முத்திரை குத்தி வந்துள்ளது. இந்த வகையில் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளராக நியமித்ததால் அவர் மீதும் பேரினவாதக் கட்சிகள் புலி முத்திரை குத்துகின்றன என அவர் தெரிவித்தார்.(செ-4)

## சிறிரெலோ....

கண்ணாடிப் போத்தல்களினால் யன்னல் கண்ணாடிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இத் தாக்குதலில் அலுவலகம் பகுதியளவில் சேதமாகியுள்ளது.

இது குறித்து, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் யாழ். மாவட்ட அமைப்பாளர் செந்தூரனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிரெலோ அமைப்பின் அலுவலகம் மீது ஏற்கெனவே இனம் தெரியாதவர்களினால் பெற்றோல் குண்டு வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வாகன விபத்தில்....

சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

மேற்படி விபத்து சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கணவன் உயிரிழந்ததுடன் மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் கிளிநொச்சி திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கணேசரட்ணம் (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

இதேவேளை கணேசரட்ணம் பரமேஸ்வரி (வயது 61) படுகாயமடைந்துள்ளார்.(செ-9,254)

## இலங்கை-....

அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்தும் இந்திய உயர் ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சுகாதார துறைக்கு இந்தியா வழங்கி வரும் உதவிக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இந்தியாவின் உதவி தொடர்ந்தும் அவசியமெனவும் உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளார்.(செ-4)

## உண்ணாவிரதமிருந்த....

தனது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என்றால் சிறைச்சாலைக்குள் தற்கொலை செய்து கொள்ள நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையிலே இவர் நேற்று சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் கடந்த 2009ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். காடுகளில் இருந்த விடுதலை புலி உறுப்பினர்களுக்கு உணவு, தண்ணீர் போன்ற பொருட்களை வழங்கியதாகவே இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் நீர்கொழும்பு ஆகிய நீதிமன்றங்களில் இவருக்கு எதிராக வழக்குகள் உள்ளன. எனவே இவர் மகசின் சிறையிலிருந்து வழக்குக்காக அழைத்துச் செல்லப்படுவதும், பின்னர் மகசின் சிறைக்கு அழைத்து வருவதும் வழமை.

இவ்வாறு கொண்டு செல்லப்படும் போது குறித்த பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளிலும் தற்காலிகமாக அவர் தங்க வைக்கப்படுவார்.

இவ்வாறு கொழும்பிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு பிற சிறைகளில் தங்கவைக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் அவர், கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இதனால் அவருடைய பிறப்பு உறுப்பு பகுதி கடுமையாக பாதிப்படைந்துள்ளதாக கூறப்படுகிறது.(செ-4)

## வாக்குறுதியை மறந்தால்....

எதிர்வரும் செப்டம்பர் மற்றும் அடுத்த ஆண்டு மார்ச் மாதங்களில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலஸ்டயர் பேர்ட் கருத்து வெளியிடுகையில்,

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை நிலைமைகள், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்ற விவகாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தல்கள் சுயாதீனமானதும், நீதியானதுமான முறையில் நடத்தப்பட வேண்டும், ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் நிலைமைகளை கருத்திற் கொண்டே பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்பதா இல்லையா என்பதனை பிரதமர் கமரூன் தீர்மானிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளித்த நாம், நிலைமைகள் முன்னேற்றம் ஏற்படாத பட்சத்தில் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின்போது ஒருமித்த குரலில் இலங்கை மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் என பர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.(செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னேஸ்வரன் தெரிவில் இந்தியா தொடர்பில்லை!

(கண்டி)

தமிழ்த் தேசியக் கூடடமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் இந்தியாவிற்கு எவ்வித தொடர்பும் கிடையாது என இலங்கைக்கான பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் பீ.குமரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் விவகாரங்களில் தலையீடு செய்வதில் என்ன இலாபம் கிடைக்கப் போகின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் அவசியம் இந்தியாவுக்கு இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-4)

# யாழ்ப்பாணம் இராணுவமயம்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது என்றும் போருக்கு பின்னர், இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிட்டு வருவதாகவும் ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரும் சோசலிச இளைஞர் சங்கத்தின் தலைவருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண ஆளுநரும் முன்னாள் இராணுவ அதிகாரியாக உள்ளார். வடக்கில் நடைபெறும் வைபங்கள், பாடசாலைகளில் நடைபெறும் வைபவங்கள் போன்றவற்றை நடத்த அருகில் உள்ள இராணுவ முகாம்களில் அனுமதி பெறுவது கட்டாயமாகும். காணி பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகளில் இராணுவத்தின் தலையீடு உள்ளது. கைது செய்யப்படுவோம் அல்லது காணாமல்போக செய்யப்படுவோம் என்ற அச்சமான மனநிலையில் வடபகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை எவ்விதமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத நிலையில், பல இளைஞர்கள் பொலிஸ் அல்லது இராணுவத்தின் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வடக்கில் உள்ள பாடசாலைகளுக்கு மின்சார வசதிகள் இல்லை.

உதாரணமாக கிளிநொச்சியில் உள்ள சில பாடசாலைகளில், மின்சார கட்டணத்தை செலுத்தாத காரணத்தினால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சில குழுக்கள் இந்த விடயங்களை பயன்படுத்தி, வடக்கில் மக்கள் மத்தியில் இன பேதங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இதேவேளை மதங்களுக்கு இடையில் பதற்றங்களை ஏற்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக சில குழுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன என்றார்.(எ-11)


இதுவல்லவோ புதுமை

பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி
ஹொலன்ட், இத்தாலி

10 நாட்களில் சட்டரீதியாகச் செல்ல
சட்ட ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

சர்வதேச தரத்திலான கல்வி

6 பேருக்கு மட்டும்

மலேசியாவில் படிக்க உழைக்க மிகச் சொற்ப கட்டணம்.
உணவு, இருப்பிடம் இலவசம்

O/L, ஆண்கள் 24 வயது.
Hotel முகாமைத்துவ கற்கை நெறி.
4 மாதத்தின் பின் மலேசியாவில் வேலைவாய்ப்பு உறுதி.
சர்வதேச தரச்சான்றிதழ்
6 பேருக்கு மட்டுமே அதிரடி வாய்ப்பு.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4087)

Digital
விஷேட கட்டண சலுகைகள்

இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை






- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - [illegible]
(C-4085)

தற்போது யாழ் நகரில்...



இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

CAD & BS — Computer Aided Design & Building Studies

With MEP — Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் ப்பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

Duration : 6 Month
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Building Careers - Transforming Lives

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிருத்திய அழைப்பும்



மலர்வு : 1944-08-18

உதிர்வு : 2013-06-10

### சோதிலிங்கம் தெய்வமலர்

எம் தாய் அவளே!
உனை நாம் பிரிந்து
45 நாட்கள் தான்
ஓடிற்று ! ஏன் எம் வாழ்வில் உனை
இப்படி நாம் இழக்க
ஆற முடியாதம்மா உன் இழப்பு
உன் முகம் காட்டி ஓடி
வாராயோ எம் வாசல்வரை

அன்புடையீர்!

அன்னாரின் மறைவு செய்தி கேட்டு இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மற்றும் பல வழிகளில் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன். 24-07-2013 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணமும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணமும் அன்புடன் அழைக்கின்றோம்.

நேரில் சமுகம் தந்து அழைக்க முடியாமையால் தயவு செய்து ஒவ்வொருவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் வண்ணமும் கேட்டுக்கொள்கின்றோம்.

-நன்றி-

இவ்வண்ணம் : மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள்

வாவினி வீதி, ஊறணி,
வல்வெட்டித்துறை.

(3427)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org